செந்தமிழ் [illegible] 1923-24
ஸம்புடம் 14 பகுதி 3


3L
R65m24, N14 V0
M23·14·3
186734

957

Regd: No. M. 916.

# THE VEDANTA DIPIKA
# வேதாந்த தீபிகை.

ருதிரோத்காரிஹூ, 1923—1924. ஸம்புடம் 14.

மார்கழிமீ. DECEMBER. ஸஞ்சிகை 3.



பத்ராதிபர்.
நடாதூர
ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி.
ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம். ஏ.

## விஷய ஸூசிகை.


1. பத்ராதிபரின் குறிப்புக்கள் 73
2. ஸ்ரீராமாயண தத்வார்த்தம்.—காடந்தேத்தி. கோபாலாசார்யர். 76
3. பஞ்சமஹாயஜ்ஞங்கள்.-வெங்கடாத்திரியகரம். க்ருஷ்ணமாசார்யர் 80
4. துளஸி.—நெடுந்தெரு. ஸ்ரீநிவாஸாசார்யர். 85
5. ஸ்ரீபெரும்பூதூர், ஆதிகேசவப்பெருமாள்.-ஆர். ஸ்ரீநிவாஸராகவன் 89
6. ஸ்ரீபாகவததனிச்லோகீ-பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 91
7. பதின்மூன்றவது வார்ஷிக மஹாஸங்கம் தினசரி க்ரமங்கள் 97
8. நீதிஸ்லோகங்கள்.—ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார். 100
9. இம்மையும் மறுமையும்.—ஸ்ரீசைல தாதாசார்யர். 102
10. ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழிபெயர்ப்புடன்.— பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 9


K. R. Press, Madras.

வர்ஷசந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1 அணா 4.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— கடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ருதிரோத்காரிவருஷ, மார்கழிமீ. [ஸஞ்சிகை 3.

" [illegible] |

[illegible] " ||

ஸ்ரீபாகவதம். 1-9-23.

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

### மோக்ஷ உத்ஸவம்

பிறப்பு இறப்பு மூப்புப் பிணி முதலியவைகளையே ஸாரமாகவுடைய ஸம்ஸாரமாகிய ம்ருத்யுவைக் கடந்து, அந்தமில் பேரின்பமாகிய மோக்ஷஸாம்ராஜ்யத்தைப் பெறுவதற்கு ஜ்ஞாநமும், அதனடியாக ஸாதிக்கப்படுகிற பகவத்யோகமுமே மார்க்கமென்றும், வேறுவழி யில்லையென்றும் உபநிஷத்துக்கள் முறையிடுகின்றன. இத்தகைய யோகத்தைச் செய்வது ஸாமான்யமாய் எல்லோருக்கும் ஸாத்யமாகாதென்பதைக் கணிசித்துப் பரமகாருணிகனை பகவான், தன்னைச் சேதனர்கள் தனது அர்ச்சையில் (ப்ரதிமையில்) ஆராதித்து அறம், பொருள், இன்பம், வீடு என்னப்பட்ட நான்குவித புருஷார்த்தங்களையும் அடையும் ப்ரகாரங்களை ஸ்ரீப்ரச்னஸம்ஹிதை முதலிய சாஸ்த்ரங்களில் தானே உபதேசித்தான்.



18734.



## ஜெர்மன்

# டிக்-டாக் கடியாரம்


புதியதாகவும், நூதனமாகவும், ஜெர்மன் தேசத்தில் இருந்து வரவழைக்கப்பட்டது. சரியான காலம் காட்டக் கூடியது. மிக்க அழகாயும், மிக்க நேர்த்தியாயும் தயார் செய்யப்பட்டது.

**விலை ரூ. 3 தான்.**

இன்றே ஒன்று வரவழைத்துப் பாருங்கள்.

# இது வேண்டுமா?

உயர்ந்த கையில் கட்டும் கடியாரம் தோலுடன் அனுப்பப்படும்.



லீவர் மூவ்மெண்டு ஜெனோள் உழைக்கக்கூடுமான அழகுள்ள கை கடியாரம். செலவு அநேகம் ஆய்விட்டது.

கையில் கட்டுவதற்கு மிக்க அழகாயுள்ளது. விலை தோலுடன் ரூ. 7—8—0

விலாசம்:—வி. எஸ். வாச் கம்பெனி., தபால்பெட்டி 105, மதராஸ்.


---

ஸ்ரீ:

### கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம்.

1928-ம் வருஷம் டிசம்பர்மீ 20௨ வியாழக்கிழமை மாலை 3-மணிக்கு ஸபையின் எட்டாவது வருஷாந்த மகாஸபை ஸ்ரீ உடையவர் ஸந்நிதியில் கூடப்படும்.

**நடைபெறவேண்டிய விஷயங்கள்.**

1. அக்ராஸனம்வகிப்பவர் உபந்யாஸம்:—
2. வருஷாந்த ரிபோர்ட்டைப்படிப்பது,
3. பாடசாலை வித்யார்த்திகளுக்கு ஸம்மானம் அளிப்பது,
4. நிர்வாகசபையிலிருந்து ராஜீநாமா செய்திருக்கும், மகா-ள-ள-ஸ்ரீ K. லட்சுமீ நாராயண செட்டியார் அவர்கள் காலிஸ்தானத்திற்கு பதில் நியமிக்கவேண்டிய விஷயம்.
5. ஸபையின் இரண்டாவது கருத்துக்கிணங்க, ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. உ. வே. கோயில்யதீந்திர ப்ரவண ஜீயர்ஸ்வாமி பஹு வர்த்தமானவிஷயமாய் உபந்யாஸம் ஸாதித்தருளுவார்.
6. வந்தனங்கள் அளிப்பது—

அகில பாகவதோத்தமர்களும் விஜயம்செய்யப் ப்ரார்த்திக்கிறோம்—

ஸ்ரீரங்கம். S. கஸ்தூரிரங்காசார்யன்,
காரியதரிசி.

---

## திவான் பஹதூர் ஸ்ரீ. உ. வே. தி. த. ரங்காசார்யர் ஸ்வாமியின் நிர்யாணம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் அத்யக்ஷராகவிருந்து, பின்னர் அதன் போஷகர்களில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டும், 1915ஸ்ரீ முதல் 1921ஸ்ரீ வரை வேதாந்த தீபிகையின் பத்ராதிபராகவு மிருந்து நமது ஸபைக்குப் பரமோபகாரகராய் ஸபையை அலங்கரித்து வந்த ஸ்ரீமான் உ. வே. தி. த. ரங்காசார்யர்ஸ்வாமி திடீரென்று க்ஷயஜ்வரத்தினால் சிலநாள்கள் பீடிக்கப்பட்டுப் பரமபதமடைந்த ஸமாசாரத்தை இங்கு மிக வ்யஸநத்துடன் குறிப்பிடுகின்றோம். இந்த ஸ்வாமி லௌகிகத்தில் மிகவும் உன்னதமான பதவியை வஹித்து வந்திருந்தும் பரம ஆஸ்திகராய் வைதிக ஸம்ப்ரதாயத்தில் நிலைபெற்று அநுஷ்டானுதிகளில் குறைவற்றிருந்தவர். மேல்நாட்டுக் கல்வியினாலும் உத்யோகங்களை வஹிப்பதினாலும் நமது பூர்விக வித்யை அநுஷ்டானம் முதலியவைகளுக்குத் தடை ஏற்படவேண்டியதில்லை என்பதை இவர் தமது வாழ்வில் நன்றாய்க் காட்டினார். ஆங்கிலம், தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஆகிய மூன்று பாஷைகளிலும் ஆழ்ந்த பரிசயத்தை உடையவராயிருந்ததால் தீபிகையை மிகவும் திறமையுடன் நிர்வஹித்துவந்தனர் என்பது அவரது எண்ணிறந்த வ்யாஸங்களினால் விளங்கும். சாஸ்த்ர ஸம்ப்ரதாயாதி விரோதங்களான விஷயங்களைச் சிறிதும் கூசாமல் கண்டித்தார். நமது மதத்துக்கே ப்ரளயம் ஸம்பவித்தாற்போல் கிளம்பிய ‘ஹிந்துமதஸ்தாபந மசோதாவை’ இவர்தான் முதன்முதலாகக் கண்டனம் செய்து அதின் விபரீதாம்சங்களைப் பல படிகளில் தீபிகையினாலும் வர்த்தமான பத்ரிகைகளினாலும் மஹாஜனங்களுக்கு எடுத்துக்காட்டினார். இங்கிருந்தநாளில் ஸ்வரூப ப்ராப்தமான ஸ்ரீவைஷ்ணவஸமூஹ கைங்கர்யத்தில் மனப்பூர்வமாக ஈடுபட்டுத் தம்மாலியன்றவளவில் அதை நிறைவேற்றி ச்ரியப்பதியின் விசேஷ கடாக்ஷத்துக்குப் பாத்ரரானார். நமது ஸமூஹம் அவரை இழந்ததே ஒழிய ப்ரபன்னர் மனோரதிக்கும் பரமாநந்தமான நித்ய பகவத்கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தை அவர் அடைந்துவிட்டார்.

அவருடைய தேஹவியோகத்தினால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஹார்த்தமான அநுசோசனத்தை இதன்மூலமாக அறிவிக்கின்றோம்.

பத்ராதிபர்.

18734

இவ்வாராதன ப்ரகாரங்களில் ‘மஹோத்ஸவங்கள்’ மிகவும் விசேஷமானவை. 1 அவைகளினால் பகவானுக்கு ஸம்ஸாரிகளின் திறத்தில் மிகுந்த ப்ரீதி உண்டாகின்றது. பகவானுக்கும் ஸந்தோஷம் மேன்மேலும் வ்ருத்தியடைகின்றது. மஹோத்ஸவமென்பதற்கு இதுவே அர்த்தம். ஜநங்களுடைய க்ஷேம லாபங்களுக்காகவே இவை நடைபெறுகின்றன. இவை பெரும்பாலும் லோக ஸம்ரக்ஷணத்துக்காகப் பிறப்பிலியான பகவான் தன் ஸங்கல்பத்தால் பலபிறப்பும் பிறந்து நடத்திய ரக்ஷா விசேஷங்களைக் கொண்டாடும் ப்ரகாரங்களாயிருக்கின்றன. இவற்றிலொன்றை முன் ஸஞ்சிகையில் எடுத்துரைத்தோம். மேலும் ஒன்றை இங்கு ஸங்க்ரஹிக்கின்றனம்.

முன் மஹாப்ரளயத்தின்போது ஜகத்து முழுவதும் ஏகஸமுத்ரமாய்ப் பெருகியிருந்ததில், அதில் ஸர்வேச்வரன் ஓராலிலைமேல் ‘தாயுந்தந்தையுமில்லாததொரு தனிக்குழவி’ யென்னும்படி ‘ஒருபாலகனாய்’ பெரியபிராட்டியைத் திருமார்பிற் றரித்து யோகநித்திரை செய்யுங்கால், தன் திருநாபிக்கமலத்தினின்றும் நான்முகனைத் தன் ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டித்து அவனுக்கு ஸகலலோக ஹிதப்ரயோஜனமான வேதங்களையும் கொடுத்து அநுக்ரஹித்தருளினான். நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும் ஸகலசாஸ்த்ரங்களையும் அத்யயனம்பண்ணி ஸர்வஜ்ஞனாய் ஸகலஸ்ருஷ்டிகளையும் பண்ணிவந்த பிரமன் தானும் கர்மவச்யனான க்ஷேத்ரஜ்ஞன் ஆகையால், தன் அறிவும் ஸ்ருஷ்டிசக்தி முதலியவைகளும் ‘இறையவன்’ அளித்த பேறுகள் என்பதை மறந்து மதங்கொண்டவனாய், அவ்விறையவனையும் மறந்தான். அவ்வளவில் பகவானுடைய காதுகளின்றும் லோககண்டகர்களான இரண்டு அஸுரர்களுண்டாய் ப்ரும்மாவைக் கொல்ல ஆரம்பித்தார்கள். அவனும் ஒரு ஸாமான்ய மனிதனைப்போல் ரோதனம் செய்தான். ஜலத்தில் கண்வளரும் ஆதிதேவனைப் பார்த்து ஸ்தோத்திரம் செய்தான். பகவானும் கண்ணைத் திறந்து அவ்வஸுரர்களைக் கடாக்ஷித்து ‘நீங்கள்வேண்டும் வரத்தைக் கேளுங்கள்’ என்று மொழிந்தார். அஸுரர்களோவென்றால், ‘தேவேசனே எம்மிடத்தில் நீர் வரம் கேளும்’ என்றார்கள். பகவானும் நகைத்து ‘நீங்கள் என்னால் மரணமடையப் போகிறீர்கள்’ என்றார். பிறகு அவர்கள் ச்ரியஃபதியுடன் ஒருமாதம் யுத்தம்செய்து பகவான் கையினால் இறப்புண்டு சங்குசக்ரதாரிகளாய்த் தேவர்களாய்த் தங்கள் இஷ்டஸித்திகளையடைந்தார்கள். பகவானுடைய ஸ்வரூபத்தையறிந்து அவனை நமஸ்கரித்து அஞ்சலிசெய்து ‘தேவரீருடைய ஸ்வரூபத்

1. ‘[illegible]
[illegible]’ – ஸ்ரீ. ப்ர. ஸ. II. 1. 8.



தை யடைந்த நாங்கள் தேவரீருடைய லோகத்தில் நித்யவாஸம் பண்ணும்படியாக எங்களை அநுக்ரஹிக்கவேண்டும்’ என்று ப்ரார்த்தித்தார்கள். அவ்வேண்டுதலுக்கு இசைந்த பகவானும் ஸத்யலோகத்துக்கும் மேலே நிற்கும் ஸ்ரீவைகுண்டத்தின் வடக்குத் திருவாசலின் வழியாய் மார்கழியீ சுக்கில பக்ஷ ஏகாதசியன்று ஸூர்யோதயத்தில் அவர்களைக் கூட்டிக்கொண்டான். அங்கு, சுத்த ஸத்வமய த்ரவ்யத்தால் ஆகிய திருமாமணி மண்டபத்தில் நித்யஸூரிகள் பல்லாண்டுபாட, சேஷபர்யங்கத்தில் திவ்யாபரண பூஷிதனாய் வீற்றிருக்கும் பரவாஸுதேவனை ஸேவித்து, மயிர்க்கூச்சலடைந்து பகவானைத் துதித்து இங்ஙனே விண்ணப்பம் செய்தார்கள்:—‘ஜ்ஞாநாநந்த மூர்த்தியே! ஸர்வஜ்ஞனே! நினைவுக்கெட்டாத ஆச்சர்யமான திருமேனியையுடையவனே! நித்யாநந்தனே! ஸத்யலோகாதிகளிலிருக்கும் ப்ரும்மாதிகள் கூட இத்தகைய தேவரீருடைய ஸ்வரூபத்தை ஒருக்காலும் அறிந்திலர். அநேக கோடி ஜன்மங்களெடுத்து ச்ரியஃபதியான தேவரீர் க்ருபையினால் தேவரீரால் கர்மசரீரத்தினின்றும் விடுவிக்கப்பட்ட நாங்கள் தேவரீரைச் சரணமடைந்து ஒரு ப்ரார்த்தனை செய்கின்றோம். அதை ஸபலமாக்க வேண்டும். அதாவது, ப்ரும்மாதி ஸகல சேதனர்களும் மார்கழியீத்தில் தேவரீருடைய லோகம் மாதிரியாக ரதனமண்டபங்களை நிர்மாணம் செய்து தேவரீருக்கு ஏகாதசி உத்ஸவத்தை நடப்பிக்கட்டும். அந்த ஸமயத்தில் எவர்கள் தேவரீரை ஸேவிக்கின்றார்களோ, நமஸ்கரிக்கின்றார்களோ, தேவரீருடைய ஸந்நிதியின் வடக்குக் கோட்டைவாசலில் நுழைந்து வருகின்றார்களோ, அவர்களெல்லாரும் ஸ்ரீவைகுண்டத்தையடைந்து நித்யஸூரிகளோடு ஸமமாய்த் தேவரீருடைய நித்யாநந்தத்தை யனுபவிக்கும்படி அநுக்ரஹித்தருளவேண்டும்.’—என்று. பக்தவச்யரான ஸ்ரீவைகுண்டநாதன் இதைச் செவியுற்று அவர்களின் விண்ணப்பத்தை நிறைவேற்ற இசைந்தான். அதுமுதற்கொண்டு இவ்வுத்ஸவத்தை ஸர்வேச்வரன் ஸர்வலோகங்களிலும் கண்டருளிரமிக்கிறான். இப்படி அவ்வேகாதசியில் உத்ஸவம் நடத்துகிறவர்களுக்கு மோக்ஷபலம் உண்டாகையால் இதற்கு மோக்ஷோத்ஸவம் என்று பெயராயிற்று.

இவ்வுத்ஸவத்துக்கு உயர்ந்த சீதளமான கொட்டகை ஏற்படுவதற்குக் காரணம், அவ்வுத்ஸவம் முதலில் அஸுரர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு அவர்கள் மோக்ஷமடைந்தார்களாகையால், மோக்ஷத்தை விரும்பும் மஹாநந்தர்களான ராக்ஷஸர்களும் பலர் வந்து தினம் தினம் ஸேவிப்பதால், அவர்கள் ஸௌகர்யமாக வந்து ஸேவிப்பதற்காக என்று சொல்லப்பட்டது. இதனால் ஆஸுர ப்ரக்ருதிகள் கூட இவ்விழாவை ஸேவித்தால் அவர்கள் நல்ல கதியை யடைவார்கள் என்றதாயிற்று.

மார்கழியீ தேவதைகளின் விடியற்காலவேளை என்று சாஸ்த்ரம் சொல்லும். விடியற்காலமானது ஸத்வகுணம் மிகுந்துள்ள காலமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அப்பொழுது செய்யப்படும் பகவதாராதனம் ஸாத்விகமெனப்படும். பொங்கல், சர்க்கரைப் பொங்கல் முதலியவையும் ஸாத்விக ஆஹாரங்களாகும். அவைகளைக்கொண்டே அந்த ஸத்வவேளையில் ஸ்ரீவாஸுதேவனை ஆராதிக்கவேண்டும். என்று விதிக்கப்பட்டது.

॥ ஸ்ரீ: ॥

# ஸ்ரீ ராமாயண தத்வார்த்தம்.

1. 'வேதத்தைக்காட்டிலும் மேற்பட்ட சாஸ்த்ரம் இல்லை' என்று சபதபூர்வகமாக மஹர்ஷி அறுதியிட்ட மஹாசாஸ்த்ரத்தின் உபநிஷத் பாகத்தை விளக்குமவற்றில் இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீமத் ராமாயணம் மிகவும் ப்ரபலமான ப்ரமாணமாயிற்று. பெரியோர்களாலும் மஹாஜநங்களாலும் பரிக்ரஹிக்கப்பட்டிருக்கும் பெருமை (பரிக்ரஹாதிசயம்), ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் பக்ஷபாதமில்லாமை, க்ரந்தகர்த்தா உண்மையான அர்த்தத்தை ஸாக்ஷாத்கரித்து அவ்வண்ணம் போதிக்க வல்லவனாகை, என்று மூன்று காரணங்களால் இந்தப்பெருமை இதற்குண்டானது. இதைத் தீர்க்க சரணாகதி என்று பெரியோர்கள் கொண்டாடுகிறார்கள். 2. 'வேதங்களால் ப்ரதிபாதிக்கப்படும் பரமபுருஷன் சக்ரவர்த்தித் திருமகனாயவதரித்தவளவில், அவனுடைய குணவிபூதி சேஷ்டிதங்களை உணர்த்துவதற்காக வேதமே வால்மீகி முகாரவிந்தத்தினின்றும் ராமாயணரூபமாக மாறிப்புறப்பட்டது' என்று ஸ்காந்தத்தில் சொல்லியிருக்கிறது. மஹாஜநங்கள் தாங்கள் கோறின புருஷார்த்தங்களை யடைவதற்காக இதைப் பாராயணம் செய்துவருகிறார்கள். புராணங்களையெல்லாம் ப்ரவர்த்தனம் செய்வித்த ப்ரும்மாவினால் லோகத்திலும், வேதத்திலுமுள்ள அநேக அர்த்தங்களை நிர்ணயிப்பதற்காக ப்ரவர்த்திக்கப்பட்டதாகையாலே இது ஓரிடத்திலும் பக்ஷபாதமில்லாத நடுவுநிலைமையை உடைத்தாயிருக்கிறது. பொதுவாய் சாஸ்த்ரார்த்தம் கேட்பதும், அதற்குக் குறிப்பிட்ட விஷயமாக ஸமாதானமுறைப்பதும் காணப்படுமிடங்களே ஒப்பத்தக்கவை. ஒன்றைக் குறித்துக்கேட்டு அதற்குப் பொதுவான ஆகாரத்தில் பதிலுரைக்கப்பட்டவிடம் ப்ரமாணமாகாது. ஸ்ரீமத் ராமாயணத்தில் 1. 'இந்த லோகத்தில் குணமுள்ளவன் யார்' என்று கேட்டதற்கு 2. 'ஜநங்களெல்லாராலும் அறியப்பட்ட ராமனென்பவன்' என்று ஸமாதானம் சொல்லப்பட்டதானது, இந்த க்ரந்தம் பக்ஷபாதத்துடன் ஒன்றை உபதேசிக்கப்பட்டதல்ல வென்பதைக் காட்டுகிறது. 'லிங்கமாஹாத்ம்ய மடங்கிய புராணத்தைச் சொல்லக்கடவீர்' என்று குறிப்பிட்டுக் கேட்டதற்கு அதைப் பெருக்கிச் சொல்லும் புராணம் போன்றவைகள் பரதத்வம் முதலியவற்றை நிஷ்கர்ஷிக்க ப்ரமாணங்களாகா.

ஸ்ரீவால்மீகிமுனி, ஸ்ரீராமவதார வ்ருத்தாந்தங்களைச் சுருக்கமாய் நாரதரிடம்கேட்டு, ப்ரும்மாவின் வரப்ரஸாதத்தால் எல்லா அர்த்தங்களையும் உள்ளபடி க்ரஹித்துத் தபோமஹிமையினால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் குறைவற அவற்றை ஸாக்ஷாத்கரித்து, 3. 'பத்து இந்திரியங்களாகிற முகங்களையுடைய பயங்கரமான ராவணனாகிய மனதை விவேகமாகிற பாணஜாலங்களினால் அடக்கி, யோகிகளுக்கு த்யான விஷயமாகிறான். நீருண்டமேகம்போன்ற வர்ணத்தையும் செந்தாமரைக்கண்ணையும் உடைய அவனைப் பாணங்களையும் வில்லையும் கையிலேந்திய வண்ணம் த்யானிக்கவேண்டும்' என்று ஸ்ரீ ஸாத்வத ஸம்ஹிதையில் சொல்லியபடியே முமுக்ஷுவுக் குபகாரமாயிருக்கிற இவ்வவதார ரஹஸ்யத்தை வெளியிட்டு உலகத்தை உய்விக்கக் கருதிக் குசலவர்களைக்கொண்டு வேத உபப்ரும்ஹணமாக ஸ்ரீமத் ராமாயணத்தை ப்ரவர்த்திப்பித்தான்.

இதன் கதை எல்லோர்க்கும் தெரிந்ததே. இதில் நம்பூர்வாசார்யர்கள் ஸம்ப்ரதாயமாகச் சொல்லும் விசேஷ அர்த்தங்களை அறியவேண்டியது அவச்யம். அவைதான் இதன் தத்வார்த்தங்கள். அவை மேற்பார்வைக்குப் புலப்படாமல் மறைவாய் விஸ்தாரமாய் ராமாயணமெங்கும் கிடக்கின்றன. அவை நம் தேசிகனருளிச் செய்தபடியே, 2. 'ஸாத்விகர்களுக்கல்லது எல்லை நிலமாகா.' ஸதாசார்ய அநுக்ரஹமாகிற அஞ்சநத்தைக் கண்ணிலிடாதவர்களுக்கு இந்தப் புதையல் காணப்படாது. ஸ்ரீ பாஷ்யகாரரே திருமலைநம்பியிடம் பதினெட்டு முறை ராமாயணம் கேட்டது

---

1. 'ന വേദാത് പരം ശാസ്ത്രം'
2. 'വേദവേദ്യേ പരേ പുംസി ജാതേ ദശരഥാത്മജേ।
വേദഃ പ്രാചേതസാദാസീത് സാക്ഷാദ്രാമായണാത്മനാ' ॥

1. 'കോ ന്വസ്മിൻ സാമ്പ്രതം ലോകേ ഗുണവാൻ', 2. 'രാമോ നാമ ജനൈഃ ശ്രുതഃ', 3. 'ദശേന്ദ്രിയാനനം ഘോരം
യോ മനോ രജനീചരം। വിവേക ശരജാലേന ശമം നയതി യോ
ഗിനാം। രാജീവ നയനഃ യന്ത്രസ്ത്ര കരാം വിദഃ ॥'

2. 'സത്ത്വോദ്രേകേ ഹി ജാത സംവിദേഷാ।'

ப்ரஸித்தமன்றோ! ஆகையால் ராமாயணார்த்தங்கள் விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கே பொருந்தினவையா யிருக்கும். மற்றஸித்தாந்தங்களுக்குப் பொருந்தா.

உபநிஷத்துக்களில் பரதத்வத்தை ஸித்தாந்தம் பண்ணி, ஜீவஸ்வரூபாதிகளையும் நன்றாய் விவரித்துப், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையும் பற்றிப் பேசப்பட்டிருக்கிறபடியே, ராமாயணத்திலும் தத்வஹித புருஷார்த்தங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

## தத்வ நிரூபணம்.

ஸ்ரீமத்ராமாயணம் விசிஷ்டாத்வைதத்தையே நிரூபிப்பது என்பது வேதாந்தங்களை நிர்ணயிக்க சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட ஆறுவிதமான அடையாள (தாத்பர்ய-லிங்க) ங்களைக்கொண்டு நோக்குவதால் விளங்கும். அவை 1 'ஆரம்பம், முடிவு, அப்யாஸம். அபூர்வதை பலம் அர்த்தவாதம்' என்பவை.

ஒருக்ரந்தத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரேபொருள் குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அங்கு (உபக்ரம) உபஸம்ஹார என்னும் அடையாள (லிங்க)ங்கள் உள. ராமாயணத்தின் ஆரம்பத்தில் தசரதன் செய்த யாகத்தில் ஹவிர்ப்பாகம் வாங்க வந்த ப்ரும்மாதி தேவதைகள் 'ஆவசார் துணை' யென்று ரக்ஷகனைத் தேடினவளவினில் 2 'ஸர்வசேஷியான பகவான் ஸமயம் பார்த்து ரக்ஷணஸங்கல்பத்தாலுண்டான புகர் தோன்றும்படி ரக்ஷணத்துக்குவேண்டிய ஆயுதங்களோடு கட்டி யுடுத்துவந்து தோன்றினான்' என்ற விடத்தில் ஜகத்பதி꞉ விஷ்ணு꞉, என்றதினால் ஜகத்காரணமான பரதத்வம் விஷ்ணு வென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ஜகத்பதி꞉ என்றதினால் பலித்த அர்த்தத்தை ஜகத்சேஷீ என்று சொல்லவே ஜகத்காரணம் என்பது அர்த்தத்தால் ஏற்படுகிறது. ப்ரும்மாவும் ருத்ரனும் ஜகத்காரணமாக மாட்டார்கள் என்பதைப் பரதேவதை இன்னாரென்று நிஷ்கர்ஷம் பண்ணும் விஷ்ணு சப்தம்காட்டுகிறது. உபஸம்ஹாரத்தில் (முடிவில்) ப்ரும்மாதனித்து ஸ்தோத்ரம் பண்ணுகையில் 3 'விகாரமில்லாதவனும் கல்யாணகுணங்களுக்கிருப்பிடமானவனும் தேவரீரே' என்று ஸ்ரீராமனே பரப்ரும்மம் என்றும்,

1. 'உபக்ரமோபஸம்ஹாராவப்யாஸோऽபூர்வதா பலம் ।
அர்த்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்யநிர்ணயே ।'
2. 'ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணுருபயாதோ மஹாத்யுதி꞉ ।
ஶங்கசக்ரகதாபாணி꞉ பீதவாஸா ஜகத்பதி꞉ ॥'
3. 'அக்ஷரம் ப்ரஹ்ம ஸத்யம் ச'



1. 'மூன்றுலகங்களுக்கும் ஆதிகர்த்தாவும் தனக்குத்தானே ஈச்வரனும் தேவரீரேயன்றோ,' என்றும் ப்ரும்ம லக்ஷணமான ஜகத்காரணத்வத்தையும், 2 'வாரீர் ஸ்ரீராமரூபியான பகவானே, அடியேன் தேவரீரால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவன்' என்று புத்ரன் என்னும் அர்த்தத்தைச் சொல்லும் ஹ்ருதய சப்தத்தாலே தான் கார்யபூதன் (ஸ்ருஷ்டிக்கப்பட்டவன்) என்பதையும் வெளியிட்டான். 3 'யாவனொருவன் ப்ரும்மாவை முற்பட ஸ்ருஷ்டிக்கிறான்' என்று ச்வேதாச்வதர உபநிஷத்தில் சொன்ன அர்த்தத்தை உத்தரகாண்டத்தில் 4 'முன்காலத்தில் தானாகவே தன் ஸங்கல்பத்தால் உலகங்களைத் தன்னுளொடுக்கி ஸமுத்ரசாயியா யிருந்ததேவரீர் ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே ப்ரும்மாண்ட ஸ்ருஷ்டிக்கு முன்னமே என்னை யுண்டாக்கினீர்' என்று தன்வாக்யத்தால் பேசினான். 5 'அப்பொழுது, ரிஷிகளும் தேவர்களும் விஷ்ணுபராக்ரமத்தால் பிளவுண்ட அந்த வில்லைப் பார்த்து ருத்ரனைக் காட்டிலும் விஷ்ணு அதிகன் என்று நிச்சயித்தார்கள்,' என்று பரசுராம வாக்யத்தாலே ருத்ரனைக் காட்டிலும் விஷ்ணுவின் பரத்வம் நிரூபிக்கப்பட்டது.

இவ்வர்த்தம் அடிக்கடி பேசப்படுவேது. (அப்யாஸம்), ராமாயணத்தில் தாரையின் ஸ்தோத்ரம், மந்தோதரியின் ஸ்தோத்ரம் முதலிய பலவிடங்களில் காணப்படும்.

அபூர்வதை யென்பது மற்ற ப்ரமாணங்களினால் அறியக்கூடாத அர்த்தத்தைப் போதித்தல்.

பலம் பகவத் ஸாலோக்யம் முதலியன.

அர்த்தவாதம் என்பது ஸ்துதியையோ நிந்தையையோ போதிப்பிக்கும் வாக்யம்.

உபபத்தி யாவது, இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படும் அர்த்தம் கூடும் கூடாதென்பதற்கு அநுகூலமான யுக்தி.

1. 'த்வம் த்ரயாணாம் ஹி லோகாநாமாதிகர்தா ஸ்வயம்ப்ரபு꞉ ।'
2. 'அஹம் தே ஹ்ருதயம் ராம',
3. 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்', 4. 'ஸம்க்ஷிப்ய ச புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி । மஹார்ணவே ஶயாநோऽப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந꞉ ॥' 5. 'ஜ்ரும்பிதம் தத்தநுர் த்ருஷ்ட்வா ஶைவம் விஷ்ணுபராக்ரமை꞉ । அதிகம் மேநிரே விஷ்ணும் தேவா꞉ ஸர்ஷிகணாஸ்ததா ॥'

இந்த ந்யாயங்களைக் கொண்டு நிர்ணயிக்குமளவில் 1. "காரணத்தையே த்யானம் செய்யவேண்டும்.' என்று உபநிஷத்துக்களெல்லாம் காரணமென்றும், முமுக்ஷுக்களினால் உபாஸிக்கப்பட வேண்டியதென்றும், முக்தரால் அடையப்படுவதென்றும், கெட்டகுணங்களுக்கெல்லாம் வேறுபட்டதென்றும், கல்யாணகுணங்களுக்கெல்லாம் இருப்பிடமென்றும், ஜகத்தைச் சரீரமாகவுடையதென்றும், ஸர்வாந்தர்யாமி யென்றும், நிரூபித்த பரதத்வமான ஸ்ரீமந்நாராயணனே, ஸ்ரீராமாயணத்திலும் பரதத்வமென்று நிரூபிக்கப்பட்டான் என்றதாயிற்று.

(தொடரும்.) காடந்தேத்தி. கோபாலாசார்யர்.

ஸ்ரீ:

# பஞ்சமஹாயஜ்ஞங்கள்.

2. "ஒரு ஜந்துவையும் ஹிம்ஸிக்கக்கூடாது" 3. "ஹிம்ஸை செய்யாமலிருப்பதுதான் தர்மங்களுக்குள் முக்கியமானது" 4. "ஹிம்ஸையில் விருப்பம் கூடாது" என்று வேதங்களும் ஸ்ம்ருதிகளும் முறையிடுகின்றன. நமக்கு எவ்விதமான கஷ்டங்கள் நேர்ந்தாலும் பிறருக்கு ஹிம்ஸையைச் செய்யாமலிருப்பதுதான் முக்கிய தர்மமென்று நாம் திடமான எண்ணங்கொள்ளவேண்டும். நாம் இந்த எண்ணத்துடன் வெகு ஜாக்கிரதையாக இருந்தாலும் தினந்தோறும் அவசியம் செய்யவேண்டியவைகளாக விதிக்கப்பட்ட பகவதாராதனரூபமான நித்ய கர்மங்களைச் செய்யும்போது விடமுடியாமல் சில ஜீவஹிம்ஸைகள் மத்தியில் உண்டாகின்றன். 5.. அதாவது— தினந்தோறும் பகவதாராதனத்திற்காகத் தளிகைப் பண்ண அடுப்பு மூட்டுகிறோம். அந்த அடுப்பிற்குள் நம்முடைய கண்ணுக்குப் புலப்படாமல் அனேகம் எறும்பு முதலிய ஜந்துக்கள் இருக்கின்றன. நெருப்பை மூட்டினவுடன் அவைகளெல்லாம் நாசமடைகின்றன. ஒரு க்ஷணகாலத்தில் சிரமப்படாமல் நாம் எவ்வளவு ஜந்துக்களைக் கொன்றுவிடுகிறோம். இது முதலாவது. இரண்டாவது— அரைப்பதற்காக நாம் வைத்துக்கொண்டிருக்கும் அம்மி குழவி இயந்திரம் முதலியவைகளால் உண்டாகும் ஜீவஹிம்ஸை. உளுந்து பயறு முதலிய தானியங்களை பூமியில் விதைத்தால் அவைகள் முளை கிளம்பி வளர்கின்றனவல்லவா. எவைகள் ஜலம் காற்று முதலியவைகளால் வளர்கின்றனவோ அவைகளெல்லாம் உயிருள்ளவைகளென்று நமது கொள்கை. இவ்விதம் வளரக்கூடிய உளுந்து பயறு முதலிய தானியங்களை இயந்திரத்தில் உடைப்பதினாலோ அம்மியில் அரைப்பதினாலோ அவைகளுக்கு முளைத்து வளரும் சக்தி போய்விடுகிறது. வளரும் சக்தியை இல்லாமல் செய்வதுதான் ஹிம்ஸை என்பது. ஒருவனைக் கொலை செய்வதும் அவனுடைய தேகத்தை வளரவொட்டாமல் செய்வதுதான். இவ்விதமாக அம்மி இயந்திரம் முதலியவைகளால் அநேக விதமான ஹிம்ஸையை வெகு சுலபமாகச் செய்துவிடுகிறோம். மூன்றாவது— சுத்தம் பண்ணுவதற்காக வைத்துக்கொண்டிருக்கும் துடைப்பம் முறம் முதலியவைகளால் உண்டாகும் ஹிம்ஸை. துடைப்பத்தினால் வீட்டைச் சுத்தம் செய்யும்போதும் முறத்தினால் தானியங்களைப் புடைக்கும்போதும் அளவற்றச் சிறிய ஜந்துக்கள் அகப்பட்டுக்கொண்டு இறந்துபோகின்றன. நாம் எவ்வளவு ஜாக்கிரதையுடன் சுத்தம் செய்தாலும் நம்முடைய கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் கணக்கில்லாத ஜந்துக்களைக் கொன்றுவிடுகிறோம். நான்காவது— உரல், உலக்கை முதலியவற்றால் உண்டாகும் ஹிம்ஸை. தானியங்களுக்கு உள்ளும் மேலும் எவ்வளவோ ஜந்துக்கள் கண்ணுக்குத்தெரியாமல் இருக்கின்றன. தானியங்களைக் குத்திச் சுத்தம் செய்யும்போது நமக்குத்தெரியாமலே அவைகள் இறந்து விடுகின்றன. இவ்விதமாய் உரல் உலக்கை மூலமாய் அநேக ஜந்துக்களை வதைக்கிறோம். ஐந்தாவது— தண்ணீர்வைக்கும் பாத்திரத்தால் உண்டாகும் ஹிம்ஸை. நதிகளிலும் குளங்களிலும் கிணறுகளிலும் ஜலத்தில் நம்முடைய கண்ணுக்குப் புலப்படாமல் மிகவும் சிறிய ஜந்துக்கள் அநேகம் வசிக்கின்றன. குடத்தில் ஜலத்தை எடுத்தவுடன் அவைகள் இறந்து விடுகின்றன. அதற்காகவே 1. 'பூமியில் பார்த்து அடி வைக்கவேண்டும், ஜலத்தை வஸ்திரத்தால் வடிக்கட்டிச் சாப்பிடவேண்டும்' என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஜலத்தை வஸ்திரத்தால் வடிக்கட்டிச் சாப்பிட்டாலும் வடிக்கட்டும்போது தங்கிய ஜந்துக்கள் இறக்கவேண்டியவைகள் தானே. ஆகையால் தண்ணீர்க்குடங்களால் அநேக ஜீவஹிம்ஸையைச் செய்கிறோம். ஜீவஹிம்ஸை உண்டாகிறதென்று இவ்வைந்து கருவிகளை யுபயோகப் படுத்தாமலிருக்கமுடியாது. தினந்தோறும் அவசியம் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட பகவதாரா

---

1. 'காரணம் து த்யேய:'

2. ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி, 3. அஹிம்ஸா பரமோ தர்ம: 4. அஹிம்ஸாநிரதா: ஸதா, 5. பஞ்சஸூநா க்ருஹஸ்தஸ்ய சுல்லீ பேஷண்யுபஸ்கர: । கண்டநீ சோதகும்பஸ்ச பத்யதே யாஸ்து வாஹயந் । மநு. 3-68.

---

1. த்ருஷ்டிபூதம் ந்யஸேத் பாதம் வஸ்த்ரபூதம் பிபேஜ்ஜலம் ॥ மநு. 6-46.

னத்திற்குக் குறைவுவராமல் பார்க்க வேண்டியது அவசியமல்லவோ! 2 ஆகையால் இவ்வைந்துவகை ஜீவஹிம்ஸைகள் பரம ஆஸ்திகர்களாலும் தடுக்க முடியாதவைகள் என்று ஆலோசித்து அவைகளாலுண்டாகும் பாபத்தைப்போக்கவேண்டியநிமித்தம் பஞ்சமஹாயஜ்ஞங்கள் (ஐந்துவிதங்களான பெரியயாகங்கள்) ஒவ்வொரு கிருஹஸ்தனுக்கும் அவசியம் செய்யவேண்டியதாகச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் இந்தப் பஞ்சமகாயஜ்ஞங்கள் கீழ்ச்சொன்ன ஐந்துவிதமான பாபங்களுக்கும் ப்ராயச்சித்தம் என்று ஏற்படுகிறது. இந்த யஜ்ஞங்களைத் தினந்தோறும் செய்தால் அந்தப்பாபங்கள் தொலைகின்றன. செய்யாவிட்டால் பாபங்கள் விருத்தியாகின்றன என்று ஏற்படுகிறது.

ஐந்துவிதமான யஜ்ஞங்களாவன (1) ருஷியஜ்ஞமும், (2) தேவயஜ்ஞமும், (3) பூதயஜ்ஞமும், (4) மனுஷ்யயஜ்ஞமும், (5) பித்ருயஜ்ஞமும் என்பன. இவற்றுள் ருஷியஜ்ஞமாவது—தினந்தோறும் காலையில் ஸ்நானம் ஸந்த்யாவந்தனம் முதலிய கர்மங்களைச் செய்தபிறகு சுத்தமான இடத்தில் உட்கார்ந்துகொண்டு வேதத்தை அத்யயனம் செய்வது. இதனால் வேதத்தை மிகவும் சிரமப்பட்டு ப்ரசாரணம் செய்துவந்த மகர்ஷிகளுக்குத் திருப்தியுண்டாகிறபடியால் இது ருஷியஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. வேதாத்யயன ரூபமானயஜ்ஞமானபடியால் இதற்கு ப்ரஹ்மயஜ்ஞமும் என்றும் பெயருண்டு. ப்ரஹ்ம என்றால் வேதம். இரண்டாவதான தேவயஜ்ஞமாவது— ஔபாஸநம் முதலான கர்மங்களைச் செய்தல். இதனால் அக்னி சூரியன் முதலிய தேவர்கள் திருப்தியடைகிறபடியால் இது தேவயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. மூன்றாவதான பூதயஜ்ஞமாவது— வைச்வதேவம் முதலிய கர்மங்களைச் செய்தல். இதனால் அநேகப்ராணிகள் திருப்தியடைகிறபடியால் இது பூதயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. நான்காவதான மனுஷ்யயஜ்ஞமாவது— அதிதிபூஜை முதலியன. இதனால் அதிதிகள் திருப்தியடைகிறபடியால் இது மனுஷ்யயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. ஐந்தாவதாகிய பித்ருயஜ்ஞமாவது —பித்ருதர்ப்பணம், நித்யச்ராத்தம் முதலியன. இதனால் பித்ருக்கள் திருப்தியடைகிறபடியால் இது பித்ருயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது.

கீழ்ச்சொன்ன ஐந்து யஜ்ஞங்களைச் செய்யும்போது அந்தந்த ருஷிகள் தேவர்கள், பூதங்கள், மனுஷ்யர்கள், பித்ருக்கள் இவர்களைச் சரீரமாகவுடைய ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணனே இந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்படுகிறான் என்ற எண்ணத்துடன் செய்யவேண்டியதென்பதுதான் ஸமஸ்த ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களாலும் ஆசார்யதிவ்ய—ஸூக்திகளாலும் நிச்சயிக்கப்பட்ட விஷயம். ஆகையால் தான் இவ்வைந்து கர்மங்களுக்கும் பொதுவாக மகாயஜ்ஞம் என்ற பெயர் வழங்குகிறது. 'யஜ' என்ற தாதுவினால் ஏற்பட்ட 'யஜ்ஞ' என்ற சப்தத்தின் அர்த்தத்தைக் கவனிக்கும்போது தேவதையைப் பூஜிக்கிற கர்மாவுக்கல்லவோ யஜ்ஞம் என்றபெயர் தகுந்ததாகும். தேவர்களல்லாத வெறும் ருஷிகளையும் பூதங்களையும் மனுஷ்யர்களையும் பித்ருக்களையும் பூஜிக்கிற கர்மங்களுக்கு யஜ்ஞம் என்றபெயர் எப்படித் தகுந்ததாகும்? அதிலும் மகாயஜ்ஞம் என்ற பெயர் எவ்விதத்திலும் ஒவ்வாது. ஆகையால் அந்தந்தச் சரீரத்துடன்கூடிய ஸர்வேச்வரனே ஆராதிக்கப்படுகிறான் என்றே அர்த்தம் கொள்ளவேண்டும்.

இந்தப் பஞ்சமகா யஜ்ஞங்களைச் செய்யும் முறைகளை அந்தந்தக் கல்பக்ரந்தங்களிலிருந்து தெரிந்து கொள்ளவும்.

இம்மாதிரி இந்த மகாயஜ்ஞங்களுக்கு ஜீவஹிம்ஸையாலுண்டாகும் பாபத்தைக் கழிப்பது பலம் என்று சொல்லியிருந்தாலும், ஸந்த்யாவந்தனாதிகளைப்போல் இவைகளும் நித்யகர்மங்கள் என்றும், பலனை எதிர்பார்க்காமல் ஒவ்வொரு கிருஹஸ்தனும் தினந்தோறும் அவசியம் செய்யவேண்டுமென்றும், செய்யாவிட்டால் கர்மங்களை விட்டுவிட்ட வ்ராத்யனாகிறானென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. நித்ய கர்மங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ஸந்த்யாவந்தனாதிகளுக்கு 1. ப்ராஜாபத்யலோகம் முதலான பலன்களைச் சொல்லுவதுபோல, ஜீவஹிம்ஸையாலுண்டாகும் பாபத்தைக் கழித்தலைப் பலனாகச் சொல்லுவதிலும் விரோதமில்லை. இவைகள் நித்யகர்மங்களாகையால் தான் சில ஸமயங்களில் காலவ்யத்யாஸத்தாலோ தேசவ்யத்யாஸத்தாலோ கொஞ்சம் அஸௌகரியம் சேர்ந்தாலும் அடியோடு

2. तासां क्रमेण सर्वासां निष्कृत्यर्थं महर्षिभिः ।
पञ्च कॢप्ता महायज्ञाः प्रत्यहं गृहमेधिनाम् ॥ मनु 3-69

* अध्यापनं ब्रह्मयज्ञः पितृयज्ञस्तु तर्पणम् ।
होमो दैवो बलिर्भौतो नृयज्ञोऽतिथिपूजनम् ॥ मनु 3-70.

1. प्राजापत्यं ब्राह्मणानां स्मृतं स्थानं क्रियावताम् ।
विष्णुपु. 1-6-34.

விட்டுவிடாமல் 2. யதாசக்தி செய்யவேண்டுமென்று சாஸ்திரங்கள் தயையுடன் மனமிரங்கிச்சொல்லுகின்றன. காம்யகர்மாவாகவிருக்கும்பக்ஷத்தில் முக்கிய பக்ஷமாகத்தான் செய்யும்படி சாஸ்திரங்கள் விதிக்கும். கொஞ்சம் குறைவு ஏற்பட்டாலும் கர்மங்கள் நஷ்டமாகப் போவதுடன் கர்த்தாவுக்கும் மகத்தான ப்ரத்யவாயங்கள் சம்பவிக்கும்.

இந்தப் பஞ்சமகாயஜ்ஞங்களைச் சரிவரச்செய்தால்தான் இவ்வுலகத்திற்கு மேன்மேல் அபிவ்ருத்தியுண்டாகிறது. 1. மந்த்ர பூர்வகமாக அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸானது சூரியனையடைந்து அவனிடமிருந்து மழையாக வெளிக்கிளம்புகிறது. மழையினால் பயிர்கள் விளைகின்றன. பயிர்களால் தானியங்கள் உண்டாகின்றன. தானியங்களைச் சாப்பிட்டு ப்ரஜைகள் வளர்கின்றனர். ஆகையால் உலகம்செழிப்பதற்குப் பஞ்சமகாயஜ்ஞானுஷ்டானம் தான் முக்கிய காரணம். ஆகையால் பஞ்சமகாயஜ்ஞங்களை அனுஷ்டிப்பவன் உலகத்தைக்காப்பாற்றுகிற இறைவனாகிறான். இக்கர்மங்களைச் செய்யாவிட்டால் உயிரோடிருந்தும் உயிரில்லாதவனாகவே கருதப்படுவான் என்று நிந்தித்து கர்மங்கள் அவசியம் செய்யப்படவேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன.

இவ்வைந்து யஜ்ஞங்களில் ஒவ்வொன்றின் ஸ்வரூபமும் மேல் ஸஞ்சிகைகளில் வரும்.

வெங்கடாத்திரியகரம். க்ருஷ்ணமாசார்யர்.

---

2. பஞ்சைதாந் யோ மஹாயஜ்ஞாந் ந ஹாபயதி ஶக்தித: ।
ஸ க்ருஹேऽபி வஸந் நித்யம் ஸூநாதோஷைர் ந லிப்யதே ॥
மநு, 3-71.

1. ஸ்வாத்யாயே நித்யயுக்த: ஸ்யாத் தைவே சைவேஹ கர்மணி ।
தைவே கர்மணி யுக்தோ ஹி பிபர்தீதம் சராசரம் ॥ மநு 3-75.
அக்நௌ ப்ராஸ்தாஹுதி: ஸம்யகாதித்யமுபதிஷ்டதே ।
ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டிர்வ்ருஷ்டேரந்நம் தத: ப்ரஜா: ॥ மநு.376.
தேவதாதிதிப்ருத்யாநாம் பித்ரூணாமாத்மநஶ்ச ய: ।
ந நிர்வபதி பஞ்சாநாமுச்ச்வஸந் ந ஸ ஜீவதி ॥ மநு. 3-72.

ஸ்ரீ:.

# துளஸீ.

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஶிகாய நம:.

ஸ்ரீமத்துலஸ்யை நம:.

திருத்துழாய் (துளஸி) என்பது விஷ்ணுபக்தர்களால் கொண்டாடக்கூடியது. அதன் பெருமையைப்பற்றிக் கொஞ்சம் எழுதுகிறேன். 1. புஷ்பங்களுக்குள் ஜாதி என மதிக்கப்படும் ஜாதி, சண்பகம், ரோஜா, மல்லிகை முதலிய எத்தனையோ பரிமளபுஷ்பங்களிருந்தும் இதிலிருக்கும் உகப்பு எம்பெருமானுக்கு மற்றொன்றில் கிடையாது. அகலகில்லேனிறையுமென்றிருக்கும் பிராட்டியைவிட்டுப் பிரிந்தாலும் பிரிவர்; இதின் பிரிவைத் தரிக்கமாட்டாதவர்போலே யெப்போதுமிதை அணிந்து கொள்வதுடன் 2. இது இருக்குமிடங்களில் பெருமாள் நித்யவாஸம் பண்ணிக்கொண்டிருப்பதாயுந் தெரிகிறது. 3. இன்னுமிந்தத் துளஸியின் தளத்தில் புஷ்கரம் முதலிய புண்யதீர்த்தங்கள், கங்கை முதலிய புண்யநதிகள், விஷ்ணு முதலிய தேவர்கள் வஸிப்பதையும், 4. துளஸியிருக்கும் வீடு புண்யஸ்தலமென்றும், அங்கு எமகிங்கரர்கள் வருவதில்லையென்றும் சொல்லியிருக்கிறது. 5. துளஸியை வைத்துப் பயிர்செய்தல், பாதுகாத்தல், அதற்குத் தண்ணீர் கொட்டுதல்,

---

1. புஷ்பேஷு ஜாதி: । 2. துலஸீகாநநம் யத்ர தத்ர ஸந்நிஹிதோ ஹரி:- 3. புஷ்கராத்யாநி தீர்த்தாநி கங்காத்யாஸ்ஸரிதஸ்ததா ।
வாஸுதேவாதயோ தேவா வஸந்தி துலஸீதலே ॥.

4. துலஸீ காநநம் யஸ்ய க்ருஹே ஸம்ப்ரதிஷ்டதி । தத்க்ருஹம் தீர்த்தபூதம் ஹி நாயாந்தி யமகிங்கரா: ।

5. ரோபணாத் பாலநாத் ஸேகாத் தர்ஶநாத் ஸ்பர்ஶநாந் ந்ருணாம் । துலஸீ தஹதே பாபம் வாங்மந:காயஸஞ்சிதம் ॥

அதைப்பார்த்தல், தொடுதல் ஆகிய இவைகளால் மனம், வாக்கு, காயம் இவைகளால் செய்யப்படும் பாபம் போய்விடும். 3. துளஸியை வைத்துப் பயிர் செய்து வேலி, மதில் கட்டிப் பாதுகாப்பவர்கள் வைகுண்டத்தை யடைகிருர்கள். 4. துளஸியின் அடியிலிருந்து எவ்வளவு புற்களைப் பிடுங்குகிருர்களோ, அவ்வளவு ப்ரஹ்மஹத்தி தோஷத்தைப் போக்கிக்கொள்ளுகிருர்கள். 5. துளஸியிருக்குமிடத்திலோ, அது ஸம்பந்தமுள்ளதாயோ செய்யப்படும் சிராத்தம் அக்ஷயமாகும். 6. துளஸிக்கட்டையைத் தேய்த்துப்பூசிக்கொண்டால் பாபம் ஒட்டுகிறதில்லை. 7. துளஸி காஷ்டத்தால் விருத்தி செய்யப்பட்ட அக்னியில் ஔபாஸனம், மற்றும் வைதிக கார்யங்கள் செய்தால் மந்திராதிகளின் குறை வித்யாஸங்களாலுண்டாகும் தோஷம் போவதுடன் அக்னி ஹோத்ரம் செய்த பலனுமுண்டாகிறது. இதே அக்னியில் பாகஞ்செய்த அன்னத்தைப் பகவானுக்கு நிவேதனம் செய்தாலும் வைச்வதேவம் முதலிய செய்தாலும் அன்ன தோஷங்கள் கழிந்துவிடும். என்றிம்மாதிரியெல்லாம் இதின் ப்ரபாவம் விரிவாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் தான் நமது பெரியோர்களும், “துளஸியும் மணியுமில்லாமல் திருவாராதனம் செய்யக்கூடாது. முத்து ரத்நம் முதலியவைகளால் செய்யப்படுமொரு அர்ச்சனையும் துளஸி அர்ச்சனைக்கு ஈடாகாது. அவச்யம் துளஸி

---

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]



யின் தார் தளம் இலை கொம்பு இவைகளில் எதையாவது கொண்டு பெருமாளுக்கு அர்ச்சனை செய்யவேண்டும். ஒன்றுமில்லாவிடில் துளஸீ துளஸீ என்ருவது 1. பத்துத்தரம் சொல்லவேண்டும் 2. உபசாரங்களுக்கோ மற்றுமெந்தத் திரவியங்களோ இல்லாததுக்கெல்லாம் துளஸியைச் சேர்த்தால் போதுமானது” என்கிருர்கள். என்றேனும் கட்கண்ணுல் காணமுடியாத எம்பெருமானை நெஞ்சமென்னும் உட்கண்ணுல் கண்டு மகிழும் ஆழ்வாராதிகளும் மற்ற வனமாலாதிகளைவிட்டுத் தண்டுழாய் மாலைமார்பன், நாற்றத்துழாய் முடியன் என்றிம்மாதிரி இதையே விசேஷமாய்ப் புகழ்ந்தும், பகவத் விச்லேஷதசையில் இதுவே தங்களுக்கு ஆச்வாஸஹேதுவாயு மருளிச்செய்திருக்கிருர்கள். உதாஹரணமாக நம்மாழ்வார் திருவிருத்தம் 53 “வாராயின முலையாளிவள்” என்னும் பாசுரத்தில் ஓ தாய்மார்களே ! இப்பெண்பிழைக்க நீங்கள் தேடும் தேவதாந்தர பஜனம் முதலியது சரியான பரிஹாரமன்று. நோய்க்கு மருந்து செய்பவர், வியாதிக்காரனுடைய பிரகிருதியையுமறிந்து செய்யவேண்டும். இவளோ பருவம் முதிர்ந்து நித்யசூரி நிர்வாஹகனையணைய ஆசைகொண்டு இப்பாடுபடுகிருள். அவன் வராவிடினும் அவன் சம்பந்தமுள்ள திருத்துழாயின் தார் தழை வேர் ஒன்றுமில்லாவிடில் அதினடி மண்ணையாவது கொண்டு வீசினுல் இவள் நோய் தணியுமென்று தோழிப்பாசுரத்தால் பகவானைப்பிரிந்த தனக்கு ஆச்வாஸமாக இத்தையே விரும்பியிருக்கிறதாய் அருளிச்செய்கிருர். இதைப்பற்றி இம்மாதிரி இதிலும், திருவாய்மொழி முதலியதிலும் பல இடமுண்டு. ஸ்ரீகுலசேகரரும் ‘முகுந்தன் பாத துளஸியை முகருவதே மூக்கின் ப்ரயோஜனம்’ என்ருர். தர்மராஜனும் துளஸி மணிமாலை தரிப்பவனிடம் செல்லாதே அங்கு நம் ஜம்பம் பலியாதென்கிருன். இப்படிப்பட்ட மகிமையுள்ள திருத்துழாய் விஷயத்தில் நம்மவர்களின் அநாதரவு அதிகமாயிருக்கிறது. மதாந்தரத்திலுள்ளவர்கள் கிருஹத்தில் துளசிமாடம் இல்லாமலிருப்பதில்லை. ஸ்ரீபாஷ்யகாரர் நியமித்த ஐந்து கைங்கர்யங்களில், பாஷ்ய ப்ரவசனம் அருளிச்செயல்களில் எல்லாருக்குமதிகாரமில்லாவிட்டாலும் இம்மாதிரி கைங்கர்யங்கள் ப்ரபன்னர்களுக்கெல்லாம்

---

1. [illegible]

2. [illegible]

பொதுவானவை. இதில் வெகுவாகத் தெரிந்தவர்களும் உபேக்ஷை செய்கிறார்கள். சாமான்யர்களுக்கு இப்பாக்கியம் கிடைக்கிறது. அவர்களுக்கும் பாவசுத்தியிருந்தும் (பாஹ்யசுத்தி வெளியாசாரம்) இருப்பதாய்த் தெரியவில்லை. பக்தியாலெதைக் கொடுத்தாலுமே கொள்ளுகிறான் என்றாலும் ஞாயிறு, வெள்ளி, செவ்வாய், துவாதசி, பர்வம், ஸங்க்ராந்தி, மத்தியானம் முதலிய நிஷித்தகாலங்களிலும் கொட்டை, எருக்கு முதலிய இலைகளிலும் அனுசாரமாயும் எடுக்கப்பட்டவும் புழு, மயிர் உள்ள துளசியை அங்கீகரிக்கமாட்டான். உபயசுத்தியுடன் சமர்ப்பித்தால் ஒவ்வொரு துளஸீ தளத்தையும் ஒவ்வொரு பிராட்டி போலெண்ணி ஸ்வீகரிப்பான். இக்காலத்திலிம்மாதிரி கைங்கர்யங்களை யனுஷ்டிக்கும் முறை வெகுவாய் லுப்தமாயிருக்கிறது. நமது ஸம்பிரதாயத்தில், தொண்டரடிப்பொடி, பெரியாழ்வார் முதலியவர்களும் ஈடுபட்டு நடத்திக்காட்டியிருப்பதை மாதிரிக்கு காட்டக்கூடமனுஷ்யனகப்படுவதரிது. ஸ்ரீரங்கத்தில் தற்சமயம் பெரியாச்ரமத்தில எழுந்தருளியிருக்கும் ஆண்டவன், தனது சிஷ்யர்களைக்கொண்டு துளஸியை வளர்த்து ஆதரவுடன் ஆசாரத்துடன் சுத்தமாய்த் தகுந்த காலத்தில் எடுக்கச்செய்து பக்திபூர்வகமாய்ச் சமர்ப்பிப்பதைக்கண்ணுற்றுப் பார்க்கும் நிர்மலஹிருதயர்கள் ஆச்சரியப்படுவார்கள். துளஸியை எடுக்கும் முன் சேவித்து, தீர்த்தம் சேர்த்துவிட்டுத் தூபதீபாதிகள் ஸமர்ப்பித்து ‘த[illegible]ஜநாஸி’ என்னும் ச்லோகத்தால் பிரார்த்தித்துவிட்டு எடுக்கவேண்டும். துளஸியை யெடுக்கும்போது வார்த்தைசொல்லக்கூடாது. துளஸியிருக்குமிடத்தில் யம கிங்கரர்கள் வருவதில்லை. அங்கு ஸர்வஸம்பத்துக்களுமிருக்கும். பக்தியுடன் துளஸியை யெடுத்தர்ச்சிப்பதாலுண்டாகும் சித்தி மற்று யாகதானாதிகளாலுமுண்டாவதில்லை.

(இன்னும் வரும்)

நெடுந்தெரு, ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பெரும்பூதூர், ஆதிகேசவப்பெருமாள்.

## ஸ்ரீ பெரும்பூதூரில்

“[illegible]” என்று நாம் ப்ரதி தினம் அநுஸந்தானம் செய்து வருவதற்குக் காரணபூதராயும், நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைச் சாச்வதமாய் நிலைநிறுத்திவைத்த மஹாசார்யருமான ஸ்ரீ பாஷ்யகாரரது ஸந்நிதியோடுகூடியதான ஆதிகேசவப் பெருமாள் கோவில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோவிலிலிருக்கும் சிலா சாஸனங்களை ஆராய்ந்துபார்த்தால், நம் பூர்வாசார்யர்களாலும் ஆழ்வார்களாலும் பரமபக்தியுடன் கொண்டாடப்பட்ட கோயில், திருமலை பெருமாள் கோவில் என்று வழங்கப்படும் ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம் முதலிய திவ்விய ஸ்தலங்களைப்போல ப்ரசித்திபெற்ற ஸ்தலமாகக் காணப்படவில்லை. ஆனாலும் நம்முடைய மஹாசார்யன் அவதரித்த ஸ்தலத்தின் மஹிமையாலும், அந்த ஆசார்யனால் ஆராதிக்கப்பட்டவர் என்பதாலுமே இந்த ஆதிகேசவப்பெருமாளுக்கு மஹிமை உண்டாயிற்று.

இந்த ஸ்ரீ பெரும்பூதூர், பதின்மூன்றாவது நூற்றாண்டில் கைதவகைதவ சாதுர் வேதிமங்கலம் என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தது. இது, அந்தக் காலத்தில் ஜயங்கொண்ட சோழமண்டலத்தில், செங்காட்டுக்கோட்டத்தில் மாகனூர் நாட்டில் அடங்கிய ஒரு கிராமமாக இருந்தது. இது, ஸ்ரீ பாஷ்யகாரர் அவதரிப்பதற்கு முன்னமேயே ஒரு அக்ரஹாரமாக இருந்திருக்கவேணும். க்ரந்தங்களில் இது பூதபுரி என்று வழங்கப்பட்டு வந்தாலும் சிலா சாஸனங்களில் ஸ்ரீ பெரும்பூதூர் என்றே வ்யவஹாரம். அவ்வூரிலிருக்கும் சிவன் கோவிலிலுள்ள சிலாசாஸனங்களிலோ இது பூதபுரி என்று வ்யவஹரிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கோவிலிலுள்ள சிலா சாஸனங்களில் மிகவும் ப்ராசீனமானது சகஸம் 1487-க்குச் சரியான க்ரோதனஸம் மாசிமீ 24உ (கி. பி. 1565) ஏற்பட்டுள்ளதே. இதற்குமுன் தேதியுள்ள சாஸனங்கள் வேறொன்றுமில்லை. ஆகையால் இந்தக் கோவில் 1565-கி. பி. முதல்தான் கொஞ்சம் ப்ரஸித்தி அடைய ஆரம்பித்தது என்று தெரியவருகிறது. இந்தச் சாஸனத்தில் வீரப்ரதாப ஸதாசிவமஹாராயர், விஜயநகர ஸமஸ்தானத்தை ஆண்டுகொண்டிருந்தகாலத்தில் அவருடைய சிற்றரசரில் ஒருவர் 150-பொன் செலவுசெய்து அவ்வூர் ஏரியை மராமத்து செய்து, அதனால் உண்டாகும் வருமானத்தின் அதிகத்திலிருந்து ஆதிகேசவருக்கும், எம்பெருமானாருக்கும் சில கைங்கர்யம் செய்து தனக்கு ஏற்பட்ட ப்ரஸாதத்தை ஸேவார்த்தமாக ராமாநுஜகூடத்தில் வந்து தங்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு விநியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்திருந்தார். ஆகையால், அந்தக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸேவைக்காக அவ்வூருக்குப் போய்க்கொண்டிருந்தார்கள் என்று ஏற்படுகிறது. கோபுரத்தின் ஸமீபத்திலுள்ள ஒரு கல்லில் வெட்டப்பட்ட சாஸனத்தில், ஸ்ரீரங்கராயர் ஆளுகைநாளில் சகஸம் 1494-க்குச் சரியான ஆங்கிரஸஸம் ஆஷாட மாஸத்தில் ஸ்ரீ பாஷ்யகாரரால் பூஜிக்கப்பட்ட ஆதிகேசவப்பெருமாளின் பூஜை நைவேத்யத்துக்காக ஈச்சங்காடுகோட்டத்திலுள்ள சில க்ராமங்களின் வரிகள் மான்யமாக விடப்பட்டன என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்

தப் பெருமாள் ஸந்நிதி ஸ்ரீ பாஷ்யகாரர் காலத்திலோ அல்லது அவர் காலத்துக்கு முன்னமேயோ ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது நிச்சயம். வாஸ்தவத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு முன்னால் 3-தலைமுறையாக இந்தப்பெருமாளை ஆஸூரிவம்சத்தார் ஆராதித்து வந்ததாகத் தெரியவருகிறது. ஸ்ரீ பாஷ்யகாரரே இந்தப் பெருமாளை ஆராதித்தது இவருக்குத் தினம் அநுஸந்திக்கும் ஸுப்ரபாதத்தில் வ்யக்தமாய் ஏற்படுகிறது. பாஷ்யகாரர் காலம் முதல் 1565 கி. பி. வரையில் இந்தக் கோவிலுக்குப் ப்ரஸித்தி ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பிறகு வரவர, அதாவது (ஸதாசிவராயர், ஸ்ரீ ரங்கராயர், வெங்கடபதிதேவராயர் நாளில்) சில சிலமான்யங்கள் விடப்பட்டுவந்தன—கருடாழ்வார் மண்டபத்திலிருக்கும் சிலா சாஸனத்தில் சகஸூ 1512, விக்ருதிஸூ கன்யா சுக்லபஞ்சமிதினம் (கி-பி 1590-ல்) திருப்பரிவேட்டை உத்ஸவத்தை நடத்திவைக்க, ஸ்ரீ பெரும்பூதூர், கச்சிப்பட்டு இந்தத் தேசத்திலுள்ள ஒவ்வொரு க்ராமத்திலும் நெல் அறுத்துக் களத்தில் அடிக்கும்போது கலத்துக்குக் குறுணி நெல் கோவிலுக்குக் கொடுக்கவேண்டியது என்று விஜயநகர ராஜாவின் ஸேனாதிபதியான ராகவநாயகரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும், இரண்டாவது ப்ராகாரத்தின் கீழண்டைச் சுவரிலுள்ள சாஸனத்தில் சகஸூ 1504 (கி. பி. 1582) க்குச்சரியான சித்ரபாநுஸூ ஜ்யேஷ்டமீ சுத்த சதுர்த்தசியன்று திருமலைராயரால் 500-பொன் கிராமங்களிலிருந்து வசூல் செய்து அதை வட்டிக்காகக் கொடுத்து, வருகிற வட்டியிலிருந்து சில உத்ஸவங்களை நடத்த ஏற்பாடு செய்தார் என்றும், பிறகு திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் இவர்களுடைய திருநக்ஷத்ரங்களைக்கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் சகஸூ 1518 (கி. பி. 1596-ல்) துர்முகி விருச்சிக பஞ்சமி தினம் ஸ்ரீ பெரும்பூதூர் நகரத்தார் எல்லோரும் சேர்ந்து திருக்கச்சிநம்பி உத்ஸவம் செய்ய ஒரு பண்டு ஏற்பாடு செய்தார்கள், என்றும் தெரிகின்றது.

இந்தச் சிலா சாஸநங்களிலிருந்து இந்தக் கோவிலுக்கு ஏட்டூர்-குமார தாதாசாரியர் தர்மகர்த்தாவாக இருந்தார் என்றுந் தெரியவருகிறது. இவர் கார்யஸ்தர்களைக்கொண்டு கோவில் வேலைகளை நடத்திவந்தார். சகஸூ 1530-(கி. பி. 1608) வரை இவர் தர்மகர்த்தாவாக இருந்தார். பிறகு சகஸூ 1556-ல் (கி. பி. 1634-ல்) ஏட்டூர் - இம்மடி - திருமலை குமாரதாதாசாரியர் என்பவர் தர்மகர்த்தாவாக இருந்தார். இவர் வைத்யநாதய்யன் என்னும் ஒருவரைக் கார்யஸ்தனாக வைத்துக்கொண்டு கோவில் கார்யத்தை நடத்திவந்தார் என்றும் தெரிகின்றது.

ஆகையால் இந்த ஆதிகேசவப்பெருமாள் கோவில் 16-வது நூற்றாண்டு முதல் வரவர ப்ரஸித்தி அடைய ஆரம்பித்தது என்றும், அதற்கு ஏட்டூர் குமாரதாதாசாரியர் தர்மகர்த்தாவாக இருந்தாரென்றும் ஏற்படுகிறது. இதின் தர்மகர்த்ருத்வம் இவர்களைவிட்டு எப்பொழுது மாறிற்று என்பதற்குச் சாஸனங்களில்லை. இந்த ஊரிலிருக்கும் சிவன் கோவில் வெகுப்ராசீனமானது. அது அந்நாளில் ப்ரஸித்திபெற்றதாயிருந்து வரவர மாலின்யத்தை அடைந்துவிட்டது. இந்தப் பெருமாள் கோவில் முதலில் சாமான்யமாயிருந்து பிறகு ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸாந்நித்யத்தால் வரவர ப்ரஸித்தி அடைந்து வருகிறது.

ஆர். ஸ்ரீனிவாஸராகவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## ஸ்ரீ பாகவத தனிச்லோகி.

(முன் தொடர்ச்சி.)

எனக்கு என்னுடைய பக்தனிடத்தில் பக்திசெய்பவன் விஷயத்தில் அதிகமான ப்ரீதி உண்டாகும் ' என்று பொதுவசனம்' பக்தர்களுக்குள் சிறந்தவர்களாகிய ஆசார்யர்களையும் குறிக்கும்.

நித்யசேஷிசுவ யோமாக:— பகவானே ஸர்வ லோகத்துக்கும் சேஷி என்பது (14) 'ஸர்வஸ்ய சித்தசித்வஸ்து சேஷிணே சேஷசாயினே' 'பத்யும் விச்வஸ்ய ஸர்வஸ்ய சேஷி பரம்' இத்யாதிகளான ஆசார்ய ஸ்ரீஸூக்திகளிலும், "எந்தை" இத்யாதி ஆழ்வார்கள் பாசுரங்களிலும், ஸர்வலோகத்திற்கும் நாராயணனே பதி என்று அர்த்தமுள்ள உபநிஷத்துக்களிலும் ப்ரஸித்தம். அப்படியிருக்க "(15) 'நாதாய நாதமுநயே அத்ராமுத்ர ச ஸ்வாமினே யதீயௌ சரணௌ சரணம் மம' (கூறுகவர்ந்த குருக்கள் குழாங்கள் குரைகழல் கீழ்' "முத்திவழிதந்தார் மொய்கழலே அத்திவத்தில்" "ஆரமுதம் ஆருமிருநிலத்தில்" இத்யாதிகளான ஆசார்ய ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்தவர்களுக்கு ஆசார்யர்களே அந்த விபூதியிலும் நித்யவிபூதியிலும் சேஷிகள் என்பது ஸ்பஷ்டமாக ஏற்படும். இவ்வளவு பகவானை நாம் உபாஸிக்கவேண்டியதற்குக் காரணங்களான குணங்கள் ஆசார்யனிடத்திலிருப்பதினால் ஆசார்யன் பகவானைப்போல உபாஸிக்கத் தக்கவன். இது கடச்ருதியில், எவனுக்குத்தேவதையினிடத்தில் விசேஷமானபக்தியும், அந்தப்பகவானிடத்தில் போலஆசார்யனிடத்தில்பக்தியும்இருக்கிறதோ, அந்தமஹாத்மாவுக்கு கீழ்ச்சொல்லிய அர்த்தங்களெல்லாம் ப்ரகாசிக்கும் என்று அர்த்தமுள்ள வாக்யத்தில் சொல்லப்படுகிறது. இங்கு ஸந்: என்பதினால் ப்ரும்மத்தை அறிந்தவன் ஸத் என்று சொல்லப்படுகிறான் என்கிற உபநிஷத்து வாக்யத்திலேபோல, இப்படி ஆசார்யபக்தி பண்ணுகிறவன் ஸத் என்று சொல்லப்படுகிறான். இப்படி ஆசார்யபக்தி செய்யாதவன், தன்னுடைய ஜன்மத்தின் முக்யமான ப்ரயோஜனமாகிய மோக்ஷத்தை அடையமாட்டானாதலால், இல்லாததற்கு ஸமானமாவான். என்பது அபிப்ராயத்தில் கொள்ளப்படுகிறது. இவ்வர்த்தத்தை

(14) சித்துக்களுக்கும் அசித்துக்களுக்கும் சேஷியாயும் சேஷன்மீது பள்ளிகொண்டுள்ள ஸமஸ்தவஸ்துக்களுக்கும் சேஷியாகிய பரப்ரமஸ்வரூபனாகிய ஸ்ரீமந்நாராயணன் எல்லாவற்றிற்கும் சேஷியான பரப்ரும்மம் அடையத்தகுந்தது.

(15) எவருடைய திருவடிகள் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் எனக்கு ரக்ஷகமோ அந்நாதமுனிகளுக்குத் தண்டன் ஸமர்ப்பிக்கிறேன்.

இந்த ஆசார்யனே மதுரகவியார் அநுஷ்டானத்தை அவர் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பென்னும் ப்ரபந்தத்தின் தாத்பர்யங்களைக்கொண்டு நிரூபித்திருக்கும் 'இன்பத்தில்' என்கிறபாட்டிலும் காணலாம். எங்ஙனே என்னில், முதல் அஜ்ஞான இத்யாதியின் அர்த்தத்தை 'தத்துவத்தை உணர்த்துதலில்,' 'ராகம்மாற்றில்' என்கிற பதங்களால் அருளிச்செய்தார். 'ஸைவஸிஹாரணாஞ்' என்னும் தாத்பர்யத்தை 'வினைவிலக்கில்' என்பதினுல் ஸங்க்ரஹித்து அருளினுர். 'ஆத்மஸாரூப்ய ஸம்பாத்' என்பதின் தாத்பர்யத்தைத் 'தன்மை ஆக்கில்' என்பதினுலும், 'ஜ்ஞாநப்ரதீபம்' இத்யாதியின் தாத்பர்யத்தை 'இசையும் பேற்றில்' என்பதினுலும், நிவ்ருத்திஸஹித ப்ராப்தாநாம் என்பதின் அர்த்தத்தை 'தத்வத்தை உணர்த்துதலில்' என்பதினுலும், நிஷ்க்ருத்ஸ்நம் இத்யாதியின் தாத்பர்யத்தைத் 'தகவொக்கத்தில்' என்பதினுலும், நியதரஸதயா என்பதின் தாத்பர்யத்தை 'இன்பத்தில்' என்பதினுலும், நித்யஶேஷிணோ யோமாத் என்பதின் தாத்பர்யத்தை 'இகழாத பல்லுறவில்' என்பதினுலும் நிரூபித்தருளினுர். ஆசாரஸுஷ்டி: என்பதின் தாத்பர்யத்தை ஸ்ரீ மதுரகவியின் அநுஷ்டானத்தை யதீஶ்ஜஸமய: என்கிறபடி ப்ரமாணமாகக்கொண்டு தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே என்று கர்த்தவ்யமாக விதித்தருளினுர்.

---

பத்ரம் புஷ்பம் ப²லம் தோயம் யோ மே ப⁴க்த்யா ப்ரயச்ச²தி ।
தத³ஹம் ப⁴க்த்யுபஹ்ருதம் அஶ்நாமி ப்ரயதாத்மந: ॥

[ஸ்ரீபாக - தச - 10-81-4.]

[ப-ரை.] பத்ரம் - இலையையாவது, புஷ்பம் - பூவையாவது, ப²லம் - பழத்தையாவது, தோயம் - ஜலத்தையாவது, ய: - எவன், மே - எனக்கு, ப⁴க்த்யா - பக்தியினுல், ப்ரயச்ச²தி - கொடுக்கிருனே, ப்ரயதாத்மந: - பரிசுத்தமான மனதையுடையவனுடைய, ப⁴க்த்யுபஹ்ருதம் - பக்தியினுல் ஸமர்ப்பிக்கப்பட்ட, தத் - அந்த வஸ்துவை, அஹம் - நான், அஶ்நாமி - சாப்பிடுகிறேன். மற்ற எல்லாத்தேவதைகளை ஆராதிப்பவர்களைவிடத் தன்னை ஆராதிப்பவர்களுக்கு வஸ்துவில் வ்யத்யாஸங்களை எதிர்பாராமல் அவனுடைய பக்தியினுலே மாத்திரம் தான் விஶேஷப்ரீதியை அடைவதாக, 'அண்வப்யுபஹ்ருதம் ப⁴க்தை: ப்ரேம்ணா பூ⁴ர்யேவ மே ப⁴வேத்' (பக்தி உடையவர்களினுல் ஸ்வல்பம் ஸமர்ப்பிக்கப்பட்டபோதிலும் அது அவர்களுடைய பக்தியினுல் எனக்



குப் பெரிதாகவே தோன்றும்), என்று கீழ்ஶ்லோகத்தில் அருளிச்செய்து, அத்தையே இந்த ஶ்லோகத்தில் விஸ்தாரமாக அருளிச்செய்கிருர். அதாவது பகவானை ஆராதிப்பதற்கு வஸ்துக்களை ஸம்பாதிப்பதும், அப்படி ஆராதனத்தை அவன் அங்கீகரிப்பதிலும் மற்றவர்களைவிட விஶேஷமுண்டு என்றபடி.

1. ஈடு மிடுப்பு மிலீசன் என்றும்,
2. 'கொள்கை கொளாமை யிலாதான் எள்கலிராக மிலாதான் விள்கை விள்ளாமை விரும்பி உள்கலந்தார்க் கோரமுதே' என்றும், நம்மாழ்வார் அவனுடைய ஆராதனம் ஸுகமாய்ச் செய்யமுடியும் என்று நிரூபித்தருளினுரிறே.

'பத்ரம் புஷ்பம் ப²லம் தோயம்' என்பதினுல் அந்தக்காலத்திற்குத் தகுந்தபடி ஸுலபமாய்க் கிடைக்கக்கூடிய ஏதாவது ஒன்றை ஸமர்ப்பிக்க அமையும் என்கிருர். இங்குத் தனித்தனிப் பதமாக அருளிச்செய்திருக்கிறபடியினுலும், சகாரம் முதலியது இல்லாமையினுலும் எல்லாவற்றையும் சேர்க்கவேண்டியது அவச்யமில்லை. இவைகளில் ஒரொன்றே அமையும் என்பது ஏற்படுகிறது. 3. 'அந்யத் பூர்ணாத³பாம் கும்பா⁴த் அந்யத் பாதா³வநேஜநாத் । அந்யத் குஶலஸம்ப்ரஶ்நாத் ந சேச்ச²தி ஜநார்த³ந:' (பகவான் ஜலம் நிறைந்த குடத்தைவிட வேறொன்றையும், அதாவது பூர்ணகும்பத்துடன் எதிர்கொண்டழைப்பதைத்தவிர வேறொன்றையும், திருவடிகளைத்துலக்குவதைத்தவிர வேறொன்றையும். குசலப்ரச்நம் பண்ணுவதைத் தவிர மற்றொன்றையும் விரும்புகிறதில்லை.) என்கிறபடியே இவைகளில் ஏதாவதொன்றைச் செய்ய அமையும் என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது.

4. 'ஏது ஏது என்பணி என்னுததுவே ஆட்செய்யு மீடே' என்கிறபடியே நான் செய்யும் கைங்கர்யம் எப்படிப்பட்டது, அது அவனுடைய பெருமைக்குப் பொருந்தும்படி எங்ஙனே என்று விலகாமல் தனக்குச் சக்யமானவற்றில் அந்வயிப்பதே அவனுடைய கைங்கர்யத்தைச் செய்வதற்கு யோக்யதை என்னப்பட்டதிறே. இங்கு இலை முதலியவைகளைமாற்றிச் சொல்லிக்கொள்ளவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிருர்கள். அதாவது ஏதாவது, ஒரு பழம், அது கிடைக்காவிடில் அதைவிட ஸுலபமாய்க்கிடைக்கக் கூடிய ஏதாவது ஒருபுஷ்பம், அதுவும் எல்லாக்காலத்திலும் கிடைக்காதாதலால் அதை

---

1. திருவாய்மொழி 1-8
2. திருவாய்மொழி.
3. பாரதம்—உத்யோகபர்வம்—87-18.
4. திருவாய்மொழி.

விட ஸுலபமாய்க்கிடைக்கக்கூடிய ஏதாவது ஒரு இலை, அதுவும் மரத்தில் ஏறுவது முதலிய ச்ரமஸாத்யமாகையினால் அதிலும் ஸுலபமாய்க் கிடைக்கக் கூடிய தீர்த்தம் இவற்றை ஸமர்ப்பிக்கவும் என்றபடி.

1. ‘ நன்னீர் தூய் ’ என்றாரிறே ஆழ்வாரும்.

எல்லோருக்கும் ஸுலபமாய்க் கிடைக்கக்கூடியதாகையினால் தீர்த்தம் கடைசியில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்றறியத்தக்கது. இது பணச் செலவு முதலியவைகளைச்செய்து ஸம்பாதிக்கக்கூடியதல்ல. ஆதலால் எவ்வள வேனும் ஆகிஞ்சன்யமினும் ஸமர்ப்பிக்கமுடியும் என்று திருவுள்ளம்.

இவ்வர்த்தம்,

2. ‘பத்ரேஷு புஷ்பேஷு ப²லேஷு தோயேஷ்வக்ரீதலப்⁴யேஷு ஸதை³வ ஸத்ஸு ।
ப⁴க்த்யேகலப்⁴யே புருஷே புராணே முக்த்யை கிமர்த²ம் க்ரியதே ந யத்ந: ॥’

‘க்ரயம் கொடுத்து வாங்காமல் கிடைக்கக்கூடியவைகளாகிய இலைகள் புஷ்பங்கள் பழங்கள் பரிசுத்த ஜலங்கள் இவைகள் எப்பொழுதும் இருக்க, பக்தி ஒன்றினாலேயே அடையக்கூடியவனான பகவானும் எப்பொழுதும் இருக்க, மோக்ஷத்திற்காக ஏன் யத்னம் செய்யப்படுகிறதில்லை ’ என்று சொல்லப் பட்டிருக்கிறது.

பகவானை ஆஶ்ரயித்தவர்கள்; அவனை விட்டுப் பிரிவாலுண்டான நோய் தீருவதற்கான அவன் ஸம்பந்தம் பெற்ற ஏதேனும் ஒன்று கிடைத்தால் போது மென்பதை 3. ‘ தைவத்தண்ணந்துழாய் தாராயினும் தழையாயினும் தண் கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசு மினே ’

என்று அருளிச்செய்திருப்பதுபோலே அவனும் தன் ஆஶ்ரிதர்களி னால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது ஒன்றை ஆசைப்பட்டிருக்கிறபடியை இங்கு இப்படி வெளியிட்டருளினாராயிற்று.

‘ யஃ ’ என்பதினால் மேலே சொல்லப்போகிற ப்ரீதி என்னும் குணமொழிய வேறொரு அதிகாரம் தேடவேண்டா, அவரவர்கள் நின்ற நிலையே அதி காரமாகும்; அபராதம் செய்தவன் அபராதம் செய்யாதவன், மூடன் பண்

1. திருவாய்மொழி 2. கருடபுராணம், பூர்வகண்டம், 219-34 3. திருவந்தாதி.



டிதன் முதலிய வ்யத்யாஸங்களைத் தான் பார்ப்பதில்லை என்றருளிச்செய்கி றான். ஸ்ரீ கீதையிலும் ‘மாம் ஹி பார்த² வ்யபாஶ்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோநய: । ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா² ஶூத்³ராஸ்தேऽபி யாந்தி பராம் க³திம் ॥’’ ஓ! அர்ஜுனனே! தாழ்ந்த ஜன்மத்தில் பிறந்த ஸ்திரீகள் வைஶ்யர்கள் சூத் திரர்கள் இவர்கள் என்னை ஆஶ்ரயித்து இருந்தார்களேயானால் அவர்களும் உயர்ந்த கதியை அடைவார்கள் என்னப்பட்டது. ஸ்ரீபாஞ்சராத்திர சாஸ்திரத் திலும் ‘ப்³ராஹ்மணை: க்ஷத்ரியைர் வைஶ்யை: ஶூத்³ரைஶ்ச க்ருதலக்ஷணை: । அர்சநீயஶ்ச ஸேவ்யஶ்ச’ என்னப்பட்டது. அதாவது ப்ராம் மண க்ஷத்திரிய வைச்ய சூத்திரர்கள் எல்லோராலும் ஆராதிக்கத்தக்கவன் என்னப்பட்டது.

‘ மே ’ என்றது இப்படி எவர்கள் பக்தியுடன் என்னை ஆராதிக்க விரு ம்புகிறார்களோ அப்படிப்பட்ட அவர்களுடைய ஆராதனத்தை அங்கீகரிப்ப தற்காகவே தேசம் காலம் இவைகளில் அருமை இல்லாமல்

‘ யே யதா² மாம் ப்ரபத்³யந்தே ’,
‘ தமருகந்த தெவ்வுருவம் ’,
‘ நெஞ்சினால் நினைப்பான் யாவனவனாகும் ’,

இத்யாதிகளிற்படியே அவரவர்கள் அபிப்ராயப்படி என்னை அமைத்துக் கொண்டு வந்திருக்கிற எனக்கு என்றபடி.

1. ‘ நாரணனார் நமக்காய் நல்கி நாம் தொழ நின்றனரே ’ இத்யாதிகளை யும் இங்கு அநுஸந்திப்பது.

அன்றிக்கே ‘ மே ’ என்பது மேல் சொல்லப்போகிற பக்தி உண்டாவத ற்குக்காரணமாகிய குண விசேஷங்களையும், ஸம்பந்தங்களையும், இதற்கு முன்னாலேயே செய்திருக்கும் உபகாரங்களையும் குறிக்கிறதாகவுமாம்.

அதுவுமன்றிக்கே ‘ மே ’ என்பது ஸௌலப்யத்தையும் மேல் ‘ உபஹ்ருதம் ’ என்பது பரத்வத்தையும் குறிக்கிறதாகவுமாம்.

‘ ப⁴க்த்யா ’ என்பதற்கு த்ருஷ்டாத்ருஷ்டங்களில் உண்டாகிய தோஷங் களைப் பரிஹரிப்பதற்காக என்றாவது, மற்றொரு ப்ரயோஜனத்திற்கு இது உபாயம் என்றாவது நினைக்காமல், இதை அவனுக்கு ஸமர்ப்பிப்பதே விசே

1. தேசிகப்ரபந்தம்.

ஷமான ப்ரயோஜனமென்று எண்ணும் ப்ரீதி விசேஷத்தினுல் என்று தாத்பர்யம் அதாவது கொடுத்ததற்குக் கைக்கூலிகொள்ள மடிகோலாமல் கொண்டதற்குக்கைக்கூலி கொடுக்கும்படியான ப்ரீதி விசேஷத்தைச் சொல்லுகிறது.

1. ‘ இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப்பெறில் நான் ஒன்று நூறுயிரமாகக்கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வேன் ’ என்று ஆண்டாள் அருளிச்செய்தாளிறே. அதாவது உத்க்ருஷ்டங்களான வஸ்துக்களைக்கண்டால் அதை அவன் திருவடிகளில் ஸமர்ப்பித்தல்லது தரிக்கமாட்டானுகையாலே அவ்விடத்தில் ஸமர்ப்பிப்பதொன்றையே ப்ரயோஜனமாக எண்ணுகிற ப்ரீதி விசேஷம் இங்கு அருளிச்செய்யப்படுகிறது என்றபடி.

ஹ்ருயத்தி - ‘ஹ்ரு’ என்னும் உபஸர்க்கம் கீழ் ச்லோகத்தில் ‘ஹ்ருணா [illegible] ஸைவோசித ’ என்று அருளிச்செய்யப்பட்ட பக்தியினுல் உண்டான விசேஷத்தைக் குறிக்கிறது. அதாவது, இராஜகுமாரர்கள் இருவர் விளையாடச்சென்ற வளவில் வஸந்த காலத்தில் சம்பகபுஷ்பத்தைத் தேடிச்செல்ல, அது காலதாமதமானபடியினுலே விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட புஷ்பங்களெல்லாம் செலவழிந்து காம்பில்லாமல் ஒரு புஷ்பம் மாத்திரம் பக்கத்தில் சிக்கிக்கிடந்ததைக்கண்டு, அதில், தானே ஸமர்ப்பிக்கவேண்டும் என்று இருவருககும் ஸ்பர்த்தை உண்டாக, விசேஷ த்ரவ்யத்தைக்கொடுத்து ஒருவன் வாங்கி ஸமர்ப்பித்துவிட்டு வீட்டுக்குவந்ததும், அன்றிரவு அந்த ராஜகுமாரனுக்குப் பகவான் ஸ்வப்நத்தில் அவன் ஸமர்ப்பித்த புஷ்பம் தனக்குத் தலையில் தாங்கமுடியாமல் மிகுந்த கனமாயிருக்கிறது, ஆகையினுல் அவனுக்கு வேண்டியவரத்தைக் கேட்டுக்கொள்ளும்படி நியமித்தருளினுன் என்கிற வ்ருத்தாந்தத்தை இங்கு அனுஸந்திப்பது.

ஹ்ருயதாத்ருநஃ - இங்கு மனதிற்குச் சுத்தியாவது ப்ரயோஜனுந்தரங்களை விரும்பாமையும், அஹங்காரமமகாரங்கள் இல்லாமையும். முதலில் பெருமாளுக்குத் திருவபிஷேகம் செய்வதற்கென்று நாள் குறித்தபோது வஸிஷ்ட மஹர்ஷி ப்ரும்ம புத்திரனுகிய நாமன்றே நாள் வைக்கிறேம், அது தப்பும்படி எங்ஙனே என்றும், நாம் பெருமாளுக்கு அபிஷேகம் செய்யும்படியான பாக்யத்தை அடையப்போகிறேம் என்றும் அஹங்காரம் கொண்டிருந்தபடியினுல் அந்தத் திருவபிஷேகத்தைப் பகவான் நடைபெறவொட்டாமல் தடுத்து, கண்டவர்களெல்லாம் வஸிஷ்டமஹர்ஷியைக் குறைவாக நினைக்கும்படி செய்தான். (இன்னும்வரும்.)

ம.ச. நரஸிம்மாசார்யர்.

1. நாய்ச்சியார் திருமொழி.

ஸ்ரீ:.

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

பதின்மூன்றுவது வார்ஷிக மஹாஸங்கம்.

## தினசரிக்ரமங்கள்.

ருதிரோத்காரி ௵ மார்கழி ௴ 9 தேதி

(24 - 12 - 23) திங்கள் கிழமை.

11 - 30 - முதல் 2 - 30 - வரை.

மஹாஸங்கம் கூடுதல்.

1. ஸ்வாகத நிவேதனம் (Welcome address)
   ஸ்ரீமான் உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பி-ஏ. பி-எல்.
2. அக்ராஸநாதிபதியை ப்ரார்த்தித்தல்.
3. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம் :—
4. முதல் தீர்மானம்:—‘ சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் உத்பத்தி முதல் அதன் ப்ரதான ப்ரவர்த்தகராயும், நெடுங்காலம் அத்யக்ஷராயும், பிறகு போஷகர்களில் ஒருவராயும், அநேக வர்ஷங்கள் வேதாந்த தீபிகையின் பத்ராதிபராயும், இருந்து ஷெ ஸபைக்கு பரமோபகாரகராய் அதன் முன்னேற்றத்துக்காக வெகுப்ரீதியுடனும் ஊக்கத்துடனும் உழைத்துவந்த திவான் பஹதூர் ஸ்ரீமான் உ. வே. தி. த. ரங்காசார்யர் ஸ்வாமி பரமபதமடைந்ததைப் பற்றியும், அதனுல் இந்த ஸபைக்கும், ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கும் நேரிட்டிருக்கும் மீட்க முடியாத நஷ்டத்தைப்பற்றியும் இந்த ஸபையின் மற்றெரு போஷகராயிருந்து இதன் மஹாஸங்கத்துக்கு உபகரித்த ஸ்ரீவைஷ்ணவ ப்ரமுகரான ஸ்ரீமான் ஸர். கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியும் இதே வர்ஷத்தில் பரமபத மடைந்ததைப் பற்றியும் இம்மஹாஸங்கத்தவர்கள் தங்கள் அந்தரங்கமான துக்கத்தை இதனுல் குறிப்பிட்டுத் தங்கள் அநுசோசனத்தை அந்த ஸ்வாமிகளின் குமாரர்களுக்கும், குடும்பத்தாருக்கும் அறிவித்துக்கொள்ளுகிறுர்கள்.

ப்ரேரகர்—ஸ்ரீ. உ. வே. எஸ். வாஸுதேவாசார்யர் பி-ஏ. எல்-டி.

ஆமோதகர்—ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் பி-ஏ. பி-எல்.

5. உபந்யாஸம். உபய வேதாந்தம்— ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப் பெருமாள் ஸ்வாமி.

6. ,, அதிகரணஸாராவளியின் கவிதை—ஸ்ரீ. உ. வே. அம்பில் கோபாலாசார்யர் எம். ஏ. பி-எல்.

3 - மணி முதல் 5 - மணி வரை.

1. உபந்யாஸம்—ஸ்ரீகீதா ஸங்க்ரஹம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலதாதாசார்யர்.

2. ,, லக்ஷ்மீதத்வம் ஸ்ரீ. உ. வே. காண்டூர் ராமானுஜாசார்யர்.

3. ,, ஸ்ருதிப்ராமாண்யம் ஸ்ரீஉ.வே. ஸ்ரீசைலசக்ரவர்த்திஸ்வாமி பி.ஏ.

மார்கழிமீ 10௳ (25 - 12 - 23) செவ்வாய்க் கிழமை.

11 - 30 மணிமுதல் 2 - 30 மணி வரையில்.

1. இரண்டாவது தீர்மானம்:— ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள், மதாபிமானத்தையும், ஸமூஹ உணர்வையும், அந்யோந்ய ஸஹோதர பாவத்தையும் அபிவ்ருத்திசெய்து ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் ஸ்ரீவைஷ்ணவமத தத்வங்களையும் ஸம்ரக்ஷித்துப் பரவச்செய்யவேண்டிய ப்ரயத்னங்களைப் பல முகங்களாகச் செய்யவேண்டுமென்றும், இந்தச் சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையையும் அதன் பத்ரிகையாகிய வேதாந்த தீபிகையையும் பலப்படுத்தி இது நமது நாட்டில் விசிஷ்டாத்வைத மதத்தையும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தையும் ப்ரசாரம் செய்விக்க ப்ரதான ஸ்தாபநமாயிருக்கும்படி அதை ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் ஆதரித்து வ்ருத்திசெய்ய வேண்டுமென்றும் சென்ற ஸூத்திய மஹாஸங்கத்தில் தீர்மானித்ததை இந்த மஹாஸங்கம் மறுபடியும் வற்புறுத்துகின்றது.

ப்ரேரகர்:—மஸூலிப்பட்டணம் ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸராகவாசார்யர்.

ஆமோதகர்கள்:— 1. ஸ்ரீ. உ. வே. T. ராமானுஜ அய்யங்கார்.
2. ஸ்ரீமான் வெங்கடாசலம் பிள்ளையவர்கள், பி.ஏ.,பி.எல்.

2. உபந்யாஸம்—கர்மயோகம், ஸ்ரீ.உ.வே. உழப்பாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

3. ,, திருவேங்கடமுடையான் விஷயத்தில் ஆழ்வாரின் ஈடுபாடு - ஸ்ரீ உ. வே. நவநீதம் க்ருஷ்ணமாசார்யர்.

4. ,, ராமானுஜமதாபிவ்ருத்தி— ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர்



3 மணிமுதல் 5மணி வரையில்

1. உபந்யாஸம்— ஸ்ரீ வைஷ்ணவமதமும் ஸ்ரீ பாஷ்யகாரரின் உபகாரமும், ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் பண்டிதரத்னம் - லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர் (மைஸூர்)

2. ,, பாஞ்சராத்ரப்ராமாண்யம் ஸ்ரீஉ.வே.திருமழிசை ராமானுஜாசார்யர்.

3. ,, ஸர்வேச்வர ஸௌலப்யம் ஸ்ரீ உப. வே. S. வேதாந்தாசார்யர், M. A. L. T.

மார்கழி மீ 11௳ (26-12. 13) புதன்கிழமை.

11 மணிமுதல் 2-30 மணி வரையில்.

1. ஸபையின் அங்கத்தினர்களின் வார்ஷிகக்கூட்டம் (Business meeting of the Members)

2. மூன்றாவது தீர்மானம்:—

(a) ஹிந்துஸமூஹத்தினருடைய புராதனவைதிக மதக்கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்கும், மதவிஷயமான மனோபாவங்களுக்கும் பெருந்தீங்கை விளைவிக்கத்தக்கதும் ஆசார்யஸ்தாநங்களை வஹிக்கும் மடாதிபதிகளை அவர்களுக்கு ஸம்பந்தமில்லாத கேவல லௌகிகர்களடங்கிய போர்டின் ஆதிக்யத்துக்குட்படுத்தி அவர்களுக்கு கௌரவஹாநியை விளைவித்து அவர்களுடைய ஸொத்துபாத்யதைகளைப் பறிமுதல்செய்து, அவர்கள் நிலைமையைக் கேவலமாக்கவும், அதனால் அவர்களுடைய சிஷ்யகோடிகளுக்கு மிகுந்தமனவருத்தத்தையும், ஆத்திரத்தையும், உண்டுபண்ணக் கூடியதாய்ச் சென்னைச்சட்டஸபையில் நிர்மாணம் பண்ணப்பட்ட ஹிந்து மதஸ்தாபந மசோதாவை ஷைசபைக்குப் புனராலோசனை செய்யும்படி பெருமை தங்கிய சென்னை கவர்னரவர்கள் திருப்பிவிட்டதற்கு இம்மஹாஸங்கம் வணக்கத்துடன் தங்கள் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறார்கள்.

(b) புதுச்சட்டஸபையார் இந்த நீதியற்றதும் அவச்யமற்றதுமான மசோதாவை அடியோடு நிராகரித்து விடவேண்டுமென்றும், தேவாலயங்களைப்பற்றி அவச்யமாய் சீர்திருத்தங்கள் வேண்டியிருந்தால் அதற்கு மஹாஜனங்களுடைய அபிப்பராயங்களையும் அந்தந்த ஸ்தாபநங்களைப் பற்றிய விசேஷ வ்ருத்தாந்தங்களையும் நீர விசாரித்து உசிதமான வேறொரு சட்டத்தை நிர்மாணம் செய்யவோ அல்லது பழைய சட்டத்திலேயே அவச்யமான மாறுதல்

களைச் செய்து கொள்ளவேண்டுமென்றும் இம்மஹாஸங்கம் தீர்மானிக்கிறது.

ப்ரேரகர்:—ஸ்ரீமான். வேலூர். ரங்கநாதன் செட்டிகாரு.

ஆமோதகர்:—ஸ்ரீ. உ. வே. நடாதூர். ஸ்ரீநிவாஸாசார்யர்.

3. உபந்யாஸம்—விஷ்ணுபரத்வம் - ஸ்ரீ. உ. வே. மெய்யுவையங்கார் ஸ்ரீரங்கம்.
4. ,, ராமாயண தத்வார்த்தம் - ஸ்ரீ. உப. வே - மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்யர்.
5. உபந்யாஸம்:—ஆத்மகுணபூர்த்தி ஸ்ரீ. உப. வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

மாலை 3 - மணி முதல் 5 - மணி வரை.

1. ஸம்பாவனை:—
2. உபஸம்ஹார உபந்யாஸம்:—ஸ்ரீ. உ. வே. பண்டித பூஷணம், பகவத்விஷயம், சே. நரஸிம்மாசார்யர்.
3. அக்ராஸநரின் முடிவுரை:—

ஸ்ரீ:

# நீதிச்லோகங்கள்.

𑌆𑌸𑌾𑌮𑌹𑍋 𑌚𑌰𑌣𑌰𑍇𑌣𑍁𑌜𑍁𑌷𑌾𑌮𑌹𑌂 𑌸𑍍𑌯𑌾𑌂
𑌵𑍃𑌨𑍍𑌦𑌾𑌵𑌨𑍇 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌗𑍁𑌲𑍍𑌮𑌲𑌤𑍌𑌷𑌧𑍀𑌨𑌾𑌮𑍍 ।
𑌯𑌾 𑌦𑍁𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑌾𑌰𑍍𑌯𑌪𑌥𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾
𑌭𑍇𑌜𑍁𑌰𑍍𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌪𑌦𑌵𑍀𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌮𑍃𑌗𑍍𑌯𑌾𑌮𑍍 ।

எவர்கள் விடமுடியாத பந்து ஜனங்களையும் ஸன்மார்க்கத்தையும் விட்டு வேதங்களாலும் அறியமுடியாத பகவானுடைய திருவடிகளை அடைந்தார்களோ அப்படிப்பட்ட கோபஸ்திரீகளுடைய பாததூளி தங்கப்பெற்ற ப்ருந்தாவனத்தில் செடி கொடியாகவாவது பிறப்பேனாவென்று உத்தவர் மிகவும் ஆசைப்பட்டு வருந்தினார்.

பகவானை அடையவேண்டுமென்று எவ்வளவு ஆசை இருந்தாலும் ஜனங்களுக்கு உலகத்தில் ஸம்ஸாரத்திலிருந்து நிவ்ருத்தி வருவது மிகவும் அரிது. புருஷன், பிள்ளை, ஸஹோதரர், பந்துக்கள் சொத்து முதலிய ஐச்வர்யங்கள் எல்லாவற்றையும் த்ருணமாக நினைத்து கோபஸ்திரீகள் ஸ்ரீ க்ருஷ்



ணனிடத்தில் அப்படி ஈடுபட்டு நடு நிசியில் அவரை அடைந்தார்கள். இவர்கள் பரமபுருஷனிடம் ஆசைகொண்டது லோக ரீதியில் தோஷமாகத் தோன்றினாலும் அந்த ஆசை பகவான் விஷயமானதால் பகவானை அடையும் வழியில் தோஷமும் குணமாகவே ஆகிவிடுகிறது, என்று உத்தவர் உபதேசித்தார். பக்த பரவசர்களான கோபஸ்திரீகளின் பாததூளி ஸ்பர்சம் பட்ட ப்ருந்தாவனத்திலிருக்கும் செடி, கொடி, புல், பூண்டுகளும் எவ்வளவு பாக்யத்தைப் பெற்றன! இதனால் பாகவதர்களின் பெருமை நன்றாக எடுத்துக் காட்டப்படுகிறது. பாகவத ஸேவை ஜன்மத்தை ஸார்த்தகமாகச் செய்கிறது என்று தாத்பர்யம். பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனாக அவதாரம் செய்து ஸகல லோகமும் உஜ்ஜீவிக்கும்படி தன்னுடைய ஸௌலப்யத்தைக் காட்டின இடம் ப்ருந்தாவனமாதலால் அது மஹா புண்ய க்ஷேத்ரமென்று எல்லா வைஷ்ணவர்களாலும் வாஸத்துக்கு ஆசைப்படத் தகுந்ததாக இருக்கிறது. இந்த ச்லோகம் வட இந்தியாவிலிருக்கும் ஒவ்வொரு வைஷ்ணவர்களாலும் ப்ரதிதினம் அனுஸந்தானம் செய்யப்பட்டு வருகிறது. ப்ருந்தாவனத்துக்கு யாத்திரைபோகும்போது ப்ரயாணிகள் இந்த ச்லோகத்தை மிகவும் பக்தியுடன் உச்சை ஸ்வரத்தில் கானம் செய்வது வழக்கம். இப்படி அநேகம் பெயர்கள் சேர்ந்து அநுஸந்தானம் பண்ணுவதினால் உண்டாகும் மதுரமான த்வனி காதில் கேழ்க்கும் எவ்வித நாஸ்திகர்களுக்கும் கூட பக்தியை உண்டாக்காமல் இருப்பதில்லை.

இப்படி பகவத் ஸான்னித்யமுள்ள இடங்களில் வஸிப்பது ச்ரேஷ்டமென்று குலசேகராழ்வாரும் திருவேங்கடமலையின் மஹிமையில் ஈடுபட்டு அவ்விடம் நித்யவாஸம் செய்யும் ஸ்ரீநிவாஸனுடைய பக்தியால் "கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே" "செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே", "படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே" "எம்பெருமான் திருமலையில் ஏதேனும் ஆவேனே" "தம்பமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே" என்று மிகவும் ஆசைகொண்டு வருந்தினார்.

இவ்வர்த்தத்தை மனதில் வைத்துக்கொண்டு ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் தயாசதகத்தில்,

𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑌵𑌂 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌦𑍁𑌃𑌖𑌂
𑌜𑌨𑍍𑌮𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌨𑍍 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌵𑌨𑍇 𑌜𑌙𑍍𑌗𑌮𑌂 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂 𑌵𑌾 ।
𑌆𑌶𑌾𑌸𑌾𑌨𑌾𑌃 𑌕𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌭𑍋 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌗𑌧𑌨𑍍𑌯𑍈𑌰𑍍
𑌅𑌙𑍍𑌗𑍀𑌕𑌾𑌰𑌂 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌦𑌯𑍇 𑌹𑌾𑌰𑍍𑌦𑌤𑍁𑌙𑍍𑌗𑍈𑌰𑌪𑌾𑌙𑍍𑌗𑍈𑌃

186734

ஹே! தயையே! உன்னுடைய ஸ்பரிசத்தால் மேன்மை பொருந்திய அதிக ப்ரீதியுடன் கூடின கடாக்ஷ வீக்ஷணங்களால் ஒரு க்ஷணகாலமாவது அங்கீகாரத்தை விரும்பி எவ்வளவோ பெயர்கள் ப்ரும்மபட்டம் முதலான எல்லா ஐச்வர்யங்களும் காலக்ரமத்தில் துக்கத்தைக் கொடுக்கிறபடியால் திருப்பதி மலையில் ஸ்தாவரமாகவாவது, ஜங்கமமாகவாவது பிறக்க ஆசைப்பட்டார்கள் என்று, திருவேங்கடமலையின் மஹிமையை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஆர். ஸ்ரீநிவாஸராகவன்.

ஸ்ரீ:

# இம்மையும் மறுமையும்.

நம் பூர்வர்கள் தபோபலத்தினால் திவ்ய திருஷ்டி பெற்றவர்களாகையால் இம்மை மறுமை இரண்டுக்கும் ஏற்ப எல்லாவிதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்றாலும் ஒவ்வொரு விதிக்கும் காரணமாக அவரவர்கள் கொண்ட கொள்கையை வெளியிட்டிருக்கவில்லை. அதைச் சொந்தமாய் ஊஹித்து வெளியிடும் வழியில் நம்மவரைப் பெரியோர் பழக்குவதுமில்லை. விதியை மீறினால் நரகம் வருமென்கிற ஒரே கொள்கையில் பயபக்தி விச்வாஸங்களோடு நாம் அவ்வவ் விதிகளின் வழியே நடந்துவரக் கடமைப்பட்டிருக்கிறோம். நடந்தும் வருகிறோம். இக்காலத்திய மேதாவிகளோ அப்படிக் காரணம் கொள்ளாத கொள்கையைக் குருட்டு நம்பிக்கை யென்று இகழ்ந்து உபேக்ஷிக்கத் தொடங்குகிறபடியால் சிற்சில விஷயங்களைப்பற்றி நமக்குத் தோன்றிய காரணங்களையும் அவ்விரண்டு விஷயங்களின் ஒற்றுமையையும், அதாவது நம்முன்னோர்கள் சாஸ்திரமூலமாக விதித்த விஷயங்கள், தேஹ நன்மை, ஸமூக முன்னேற்றம், முதலிய இம்மைச் சுகங்களுக்கு ஒத்தேயேற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதையும் எழுதுவோம்.

வேதமும் ஸ்மிருதிகளும் பகவானது ஆஜ்ஞையாகையால் அதில் விதித்தபடி நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டிப்பவர்களுக்கு அவ்வவைகளுக்கென்று கூறப்பட்ட மறுமைப் பயன் கைக்கூடுவது திடமான விஷயமாகையால் அவற்றின் ஐஹிகமான உபயோகங்களை நாம் இங்கு எழுதப் புகுவதால், இந்த வியாஸத்திற்கு இம்மையும் மறுமையுமென்று முகப்பெழுதுவது பொருந்தாததாகாது. ஸ்வபாவத்திற்கேற்ற சாஸ்திரமும் ஆர்யதர்மமுமென்று இதற்கு முகப்பெழுதினாலும் எழுதலாம். அதைவிட இம்மையும் மறுமையும் என்கிற முகப்பே பொருத்தமுடையதென்று நினைத்து இதையே யெழுதியிருக்கிறோம்.



இப்பரத கண்டத்தில் ஒவ்வொருவருடைய எல்லா நடவடிக்கைகளும் மதத்தோடு ஸம்பந்தப்பட்டவை. அவ்வவமதத்தினர்கள் ப்ரமாணமாக அங்கீகரித்த மூல க்ரந்தங்களை அநுஸரித்து அவைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன. அதற்கென்று சில ஒழுங்குகளும் வரிசைகளும் மூலக்ரந்தங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகள் ஒரு சிறிதளவும் மாறாது அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று கட்டளை யேற்பட்டு அப்படியே ஆசாரத்திலிருக்கின்றன. ஆரியர்கள் அவ்விதம் அநுஷ்டித்து வருவதில் அதிக சிரத்தையுடையவர்கள். மற்றையோரைவிடப் பலவிதத்திலும் கட்டுக்குள்ளடங்கி நடப்பவர்கள். அதிக ஊற்றமுடையவர்கள்.

இந்தியா தவிர மற்ற தேசங்களில் கூட்ட நடவடிக்கைகளுக்கும் மதத்திற்கும் எவ்வளவும் ஸம்பந்தமில்லை. சாதாரணமாய் ராஜாவின் கட்டளையை மீறுபவர்களே மரணதண்டனைக்குள்ளாகிறார்களென்பது தெளிவாயிருக்கிறதே. ஸகல ஜகத்காரணபூதனாகிய பகவானது கட்டளையை மீறுகிறவர்கள் எவ்வித தண்டனையையடையத் தக்கவர்களோ யோசித்துப் பார்க்கலாம். ஆகவே நமது மூல ப்ரமாணங்களில் கூறப்பட்ட முறையை எவ்வளவு பயபக்தி ச்ரத்தா விசுவாஸங்களோடு அநுசரிக்கவேண்டுமோ அவ்விஷயம் நாம் இங்கு புதிதாய் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லாதது.

நமது தர்மங்கள் வெகுகாலமாக தேசாந்தரஸ்தர்களுக்கு வழிகாட்டியாயிருந்தது. இன்னும் அப்படியே இருக்கிறது. ஆனால் காலத்தின் பெருமையால் அந்த நமது தர்மங்களின் மர்மங்கள் மறைந்து போகலாயின. புது மேதாவிகளுக்கு அதை அறியச் சக்தியில்லாமல் போய்விட்டது. ஆகவே அவற்றின் அநுஷ்டானமும் குறைவுபடலாயிற்று. அந்த மர்மங்களைப் பற்றியாவது அவற்றின் காரணங்களைப்பற்றியாவது நாம் இப்போது நிரூபிக்கவரவில்லை. நாம் தர்மங்களுக்கும் ஐஹிகசுகத்திற்கும் எவ்வளவு ஸம்பந்தம் இருக்கிறது என்பதைப்பற்றி நமக்குத் தெரிந்த வரையில் இங்கு கொஞ்சம் விவரிக்கிறோம். அதிலுள்ள குற்றம் குறைகளை புத்திமான்கள் எடுத்துக் காட்டவேண்டும். இவ்வழியாய் இது பூர்த்திபெற்று எல்லோருக்கும் தெரியவரும்.

நம் நாட்டு வாலிபர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியாலும் மேல்னாட்டு வ்யுத்பந்நர்களின் சரித்திரா ஆராய்ச்சியாலும் நம்மவர்களைவிட மேனாட்டு சாஸ்திர வ்யுத்பந்நர்களே விஷயங்களை நன்றாக விவேசநம் செய்து குணமுள்ளதைப் புகழ்பவர்களென்றும் அவர்கள் சொல்வதே ப்ரமாணிகமென்றும் திடமான நம்பகம் உண்டாயிருக்கிறது. ஆகவே அந்த மேல்நாட்டு பண்டிதர்கள் நம் அநுஷ்டான விஷயமாய் தீரவிமர்சம் செய்து ஸித்தாந்தம் செய்திருக்கும் சில விஷயங்களை நம் சொந்தக்குறிப்புடன் சேர்த்து இங்கே விவரிப்போம்.

பின் மாலை (விடியற்காலத்தில்) நித்திரையைவிட்டு எழுந்திருப்பது முதல் இரவு நித்திரை செய்யும்வரையில் நடக்கவேண்டிய நீதி கால ஒழுங்காக நம்மதக் கிரந்தங்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. காலையெழுந்து படுக்கையைவிட்டெழுந்து தேஹ சோதநம் செய்துகொண்டு ஸ்நாநம்பண்ணி ஸந்தியாவந்தனம் செய்து ஹோமம் தேவபூஜைகளை முடித்து அதிதிகளை ஸத்கரித்து பலிபோட்டு அதன்பிறகு போஜனம் செய்யவேண்டுமென்பது பிராஹ்மணர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறையென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வீட்டை விளக்கி மெழுகிக் கோலமிட்டு அலங்கரிக்க வேண்டியதும் நம் தர்மமே. அப்படியே, ஆஹாரம் நடை முதலிய வெகு அம்சங்கள் பரிசுத்திக்கு ஹேதுவாகச் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறன. அநாதிகாலந் தொடங்கி வம்சபரம்பரையாய் வெகு ஸாவதானமாய் நடவடிக்கையில் கொண்டுவரப்பட்ட அநேகம் நற்குணங்களும் ஜாதிபேத கொள்கையும் இவ்விந்தியாவில் வேரூன்றியிருக்கிறது.

இவ்வித நடவடிக்கையெல்லாம் மதத்தோடு ஸம்பந்தப்பட்டதாக ஏற்படுத்தப்பட்டுப் போய்விட்டபடியால் இவ்விந்தியாவில் மாத்திரமே அவை முறை பிறழாது நடந்தேறிவருகிறது. மேனாடுகளில் இது எவ்வளவு வரையில் அநுஷ்டானத்திலிருக்கிறதோ அவ்வளவும் ஸௌகர்யத்தை அநுசரித்து நடவடிக்கையில் வருகின்றனவேயல்லது மதக்கோட்பாட்டையநுசரித்து நடத்தப்படவில்லை. நம்பூர்வாசாரமும் மததர்மங்களும் சில சில மேலெழுந்தவாரியாய் பார்ப்பதில் பிரயோஜனமில்லாததென்று சிலர் நினைக்கும்படியாய்விட்டது. மேனாட்டு நாகரிகம் நம் தேசத்தில் அங்கங்கு துளிர்த்தெழுந்து வளர்ந்துவிடவே நமக்குக்கூட அவ்வித எண்ணம் உண்டாகலாயிற்று.

முக்கியமான ஸம்ஸ்காரங்களைப்பற்றி நாமிங்கு சொல்ல வரவில்லை. ஆனால் சிலவை மாத்திரம் ஜன ஸமூகத்தார் ஆதரித்துவரும் வழிக்குக் கெடுதியை விளைவிக்கின்றனவென்பதில் ஸம்சயமில்லை. ஆகா! அது எவ்வளவு வியஸனகரமான விஷயம். நம்மவர்களில் எவர்கள் மகா மேதாவிகளாகத் தங்களை நினைத்துக்கொண்டு நம் பூர்வாசாரங்களை தூஷிப்பதும் தள்ளுவதும் உதாஸிப்பதும் பகைப்பதும் செய்கிறார்களோ, அவர்கள் அனைவரும் நம் ஆசாரங்களையும் தர்மங்களையும் பற்ற மேல்நாட்டுப் பண்டிதர்கள் எவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்பதை நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமென்று நாம் ஸங்கோசமின்றிச் சொல்லலாம்.

அருணோதயத்திற்கு முன்னமே தூக்கத்திலிருந்து விழித்தெழுந்திருக்கவேண்டுமென்று நம் சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்டிருக்கிறதே. இப்போது அவ்விதியை அநுஸரித்து நடப்பவர் யார். அது வேண்டாம். மத்தியானம் வரையில் கூச்சமின்றி படுக்கையில் படுத்தபடியே யுறங்குகிறவர்கள் நம் ஸமூகத்தில் எத்தனையோ பெயர்கள் இருக்கிறார்களன்றோ, அவர்கள், மேனாட்டு சாஸ்திரபண்டிதர் (டாக்டர்) டைடே அவர்கள் எழுதியிருக்கும் குறிப்பை தப்படிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

இன்னும்வரும். ஸ்ரீசைல தாதாசார்யர்.

ஸ்ரீ:

# சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்,

## பதின்மூன்றாவது வருஷத்திய அறிக்கை.

# 1922—1923.

ஸ்ரீ:

## ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபை.

### 1922. 1923. வருஷத்திய எக்ஸிக்யூடிவ் கமிட்டி மெம்பர்களின் பெயர்.

1. ஸ்ரீ. உ.ப. ராவ்பகதூர் - S. ராமஸ்வாமி அய்யங்கார் - ஸபாத்யக்ஷர்.

2. „ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பார்க் டவுன்.
3. „ எஸ். ராஜகோபாலாசாரியார், மன்னார்குடி.
4. „ டி. கோதண்டராமய்யங்கார், தஞ்சாவூர்.
5. ஸ்ரீமான் திவான் பகதூர்-நம்பெருமாள் செட்டியார், சென்னை.

(2–5) உபஸபாத்யக்ஷர்

6. ஸ்ரீ-உ.ப. எஸ். கோபாலசாமி ஐயங்கார், மைலாபூர்.
7. „ ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், புரசைவாக்கம்.

(6–7) கார்யதர்சிகள்.

8. „ கோமடம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார், உதவி கார்யதர்சி, கோமளேச்வரன் பேட்டை.
9. „ பண்டிதபூஷணம், சே. நரஸிம்மாசாரியர், புரசைவாக்கம், ஸபை வித்வான்.
10. „ கடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர், புரஸைவாக்கம்.
11. „ டி. வி. நீலமேகாசாரியர், கீழ்ப்பாக்கம்.
12. „ வி. ராஜகோபாலாசாரியர், சென்னை.
13. „ தி. திருவேங்கடாசாரியர், சென்னை.
14. „ பி. ஆர். க்ருஷ்ணஸாமி அய்யங்கார், எழும்பூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

## சென்னைபட்டணம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதின்மூன்றாவது வருஷத்திய அறிக்கை.

சென்ற 1922-வது௵ டிசம்பர் மாதத்தில் நடந்த 12-வது வார்ஷிக மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ.ப. ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்காரையும் ஸ்ரீ. உ.ப. S. கோபாலஸ்வாமி அய்யங்காரையும் கார்யதர்சிகளாகத் தேர்ந்தெடுத்ததின் பேரில், ஸ்ரீ. உ.ப. ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், ஸ்ரீ. உ.ப. பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியிடம் 1923-வது௵ ஜனவரி௴ 1௳-சார்ஜ்வாங்கிக்கொண்டு வேலைபார்த்து வருகிறார்.

ஸபை:—இந்தஸபை 1909-வது௵ முதல் 1915-வது௵ வரையில் ஸ்ரீ அஹோபிலமடத்தின் மேன்மையைக் கருதிய ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸபையாய் 'ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய ஸபை' என்னும் பெயரால் வழங்கிவந்தது. 1915-வது௵ திருவள்ளூரில் கூடின மஹாஸங்கத்தில் இந்த ஸபையில் உண்டாகும் உபகாரத்தை ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் அடைய வேண்டும் என்று கருதி, அது முதல் இந்த ஸபையின்பெயர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை என்று மாற்றப்பட்டது. 1922-வது௵ டிசம்பர்௴த்தில் வுப்பட்டேர் ஸ்ரீமான் ஆழ்வார் செட்டியாரால் கட்டப்பட்டிருக்கும் ராமாநுஜ கூடத்தில் நடந்த பன்னிரண்டாவது மஹாஸங்கத்திலும் தென்கலை வடகலை, மடமுனித்ரய ஸம்ப்ரதாயஸ்தர்களான எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் மனஸ்கரித்து இந்த ஸபையை நடத்தினது மிகவும் த்ருப்திகரமாக இருந்தது. ஸபையின் மூன்று தினங்களில் ததீயாராதனம் செய்வித்து ஸபையின் உபயோகத்துக்காக ராமாநுஜகூடத்தையும் விட்டு, வித்வான்களுக்கு ஏராளமாய் ஸம்மானம் கொடுத்த வுப்பட்டேர் ஸ்ரீமான் ஆழ்வார் செட்டியாருக்கும், இவ்வளவு அழகாய் நடக்கும்படி செய்து ஸகல கார்யங்களையும் நிர்வஹித்த ஸ்ரீ. உ.ப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமிக்கும் ஸபையோருடைய வந்தனங்கள் சொல்லவேண்டியது கடமை. இந்த ஸதஸ்ஸில் நடந்த விமர்சையையும், உபந்யாஸங்களைப்பற்றியும், ஸம்மானங்களைப் பற்றியும், தீபிகையின் 13-வது ஸம்புடம் 3-வது ஸஞ்சிகையில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஸங்கத்தின் வரவு சிலவு கணக்கு இத்துடன் அநுபந்தம் செய்யப்பட்டிருக்கிறது. (Appendix. A.) எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் ஒன்றுசேர்ந்து, ஆகவேண்டிய பெரிய கார்யங்களைச் சர்ச்சைசெய்து ஸ்ரீராமாநுஜ தர்சனத்தை உத்தரோத்தரம் அபிவ்ருத்திபண்ண யத்னிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேதாந்த தீபிகை. இந்த மாதாந்தத் தமிழ் பத்ரிகைக்கு இந்த புரட்டாசி மீ'த்துடன் 13 - வயஸ் பூர்த்தி ஆகிவிட்டது. நம்முடைய மதவிஷயமாயும் வேதாந்த விஷயமாயும் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் வெகுவாயும் காலமோ குறைவாயும், விக்னங்களும் அநேகமாயிருப்பதாலும், ஸரியானபடி ஸங்கதிகளைத் தெரிந்துகொள்ள ஸதாசார்யனைத் தேடி க்ரஹித்துக்கொள்ளவேண்டியதா யிருப்பதாலும், அப்படிக்குச் செய்ய எல்லா ஊரிலும் இப்போக்கொத்த ஆசார்யர்களில்லாததாலும், அப்படிக்கிருந்தும் காலவசத்தால் அவர்களை நாடிக்கேட்க ஆஸக்தியும் அவகாசமும் பலருக்கு இல்லாததாலும், மேலும் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் பலவும் ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களிலிருப்பதாலும், அதிக ரஹஸ்யமான விஷயம் ஆசார்யனிடமிருந்தே தெரிந்துகொள்ளவேண்டியதாயிருந்தாலும், முக்யமான மற்ற விஷயங்கள் பல தெரிந்துகொள்ளவேண்டி யிருப்பதாலும், அவைகளை எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி தமிழில் இந்தப் பத்ரிகை பிரசுரம் செய்யப் பட்டுவருகிறது. தீபிகைக்கு எளிதான தமிழ்நடையில் வியாஸங்களை எழுதும்படிக்கும், ப்ரமாணங்களைக் கீழ்குறிப்புக்களாகக் கொடுக்கும்படிக்கும் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்கும் வசனங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பும் எழுதிவிடவேணும் என்று விஷயப்ரதானம் செய்யும் ஸ்வாமிகளுக்கு விண்ணப்பம் செய்துகொண்டு கூடியவரையில் வர வர நடையை ஸுலபமாக்கிக்கொண்டு தீபிகை நடத்திவரப்பட்டுவருகிறது. தீபிகையில் அவச்யமான உபயுக்தாம்சங்கள் ப்ரகாசிப்பிக்கப்பட்டுவருகின்றன. புராணம், இதிஹாசங்கள், ஸ்ம்ருதிகள் இவைகளிலிருக்கும் ஆசாரம், தர்மம், வ்யவஹாரங்களின் ஸ்வரூபம் ஆவச்யகதையைக் காட்டும் வியாஸங்கள், நீதியையும் தர்மத்தையுங் காட்டக் கூடிய கதைகள், குருபரம்பரையில் சில பராமர்சங்கள், இவைகளைப்பற்றின வ்யாஸங்கள் விசேஷமாய் வெளியிடப்பட்டு வருகின்றன.

தீபிகை, மெம்பர்களின் சந்தாவைக்கொண்டே நடத்தவேண்டியிருப்பதாலும், இதற்கு மூலதனமில்லாததாலும், இதற்கு விஷயப்ரதானம்செய்து வந்த ஸ்வாமிகளுக்கு இதன் ஜவீஜில் ஒன்றும் மிச்சமில்லாததாலும் ஸபையோர்களுடைய க்ருதஜ்ஞதையையே வந்தன பூர்வகமாய்த் தெரிவிக்கிறோம். இனி மெம்பர்களின் தொகை அதிகப்பட்டு வரக்கூடிய த்ரவ்யத்திலிருந்து ச்லாக்யமான வ்யாஸம் எழுதி அனுப்புகிறவர்களுக்கு ப்ரோத்ஸாஹப் படுத்துவதின் பொருட்டு யதாசக்தி ஸம்பாவனை செய்யவேண்டுமென்று ஸபையோரின் கருத்து. ஆகையால் ஸ்ரீவைஷ்ணவாபிமானிகளும் ஏராளமாய்ச் சேர்ந்து இந்த ஸமூஹகைங்கர்யத்தைச் சிறப்பாகத் தலைக்கட்டி வைக்கும்படி ப்ரார்த்திக்கப்படுகிறது. ஒவ்வொரு மெம்பரும் ஒருவர் இருவரையாவது சேர்த்துக்கொடுக்கிறது என்ற த்ருடாபிஸந்தியை வைத்துக்கொண்டால் ஸபை நிரம்ப முன்னுக்கு வந்துவிடும்.



தீபிகைக்குத் தெலுங்கு பாஷையில் ஸரியான தர்ஜமாய் ஒரு பிரதி பிரசுரம்செய்ய யத்னம்செய்யப்பட்டு வரப்படுகிறது. இதைப் பகவான் ஸபலமாக்கவேண்டும்.

| மெம்பர்கள். | வருஷாரம்பத்தில். | முடிவில். |
|---|---|---|
| முதல் வகுப்பினர் | 58 | 82 |
| இரண்டாம் வகுப்பினர் | 285 | 401 |
| சாச்வத மெம்பர்கள் | 1 | 1 |
| ஆனரெரி மெம்பர்கள் | 7 | 7 |
| ஆக மொத்தம் | 351 | 491 |

மேல் குறிக்கப்பட்ட மெம்பர்களைத்தவிர மடாதிபதிகள் முதலியவர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தீபிகை இனமாக அனுப்பப்படுகிறது. சில பத்ரிகைகளுக்கு மாறுதலாகவும் தீபிகை அனுப்பப்படுகிறது.

ஸெகரட்டெரி வேலையை ஒப்புக்கொண்டதும் மெம்பர்கள் நிரம்பவும் ஸ்வல்பமாயிருப்பதைக்கண்டு ஸ்நேஹிதர்களுக்கு அங்கங்கே எழுதிச்சேரும்படி ப்ரோத்ஸாஹப்படுத்தினதின்பேரில் ஸுமார் 60-பேர்களும், அவருடைய சொந்தக்கார்யமாய்த் தெற்குப்பக்கம் ஸஞ்சாரம் போன ஸமயத்தில் புதுக்கோட்டை ப்ராந்தத்தில் ஸுமார் 20-பேர்களும், ஸ்ரீரங்கத்தில் 62-பேர்களும், மெம்பர்களாகச் சேர்த்துவந்தார்.

ஸ்ரீரங்கத்தில் அவருக்கு ஸஹாயமாயிருந்து தங்களுடைய ச்ரமத்தைப்பாராமல் வீடுவீடாக அலைந்து உபகரித்த ஸ்ரீமான் S. P. விஜயராகவாசாரியர், ஸ்ரீமான் S. க்ருஷ்ணசாமி அய்யங்கார் ஸ்வாமிக்கும் ஸபையின் வந்தனம் ஸமர்ப்பிக்கப்படுகிறது. ஸ்ரீ அஹோபிலமட ஸ்வாமி ஸந்நிதிக்கும் வானமாமலை மட ஸ்வாமி ஸந்நிதிக்கும் ஒவ்வொருவரும் தங்களுடைய மடங்களுக்கும் வித்வத் ஸம்மானமாகவும் விநியோகிக்கும்படி நூறு நூறு காபிகளாவது வாங்கி உபகரிக்கும்படி ப்ரார்த்தனைபத்ரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த ஸந்நிதிகளிலிருந்து அனுகூலமான ஸ்ரீமுகத்தைக் கூடிய சீக்ரத்தில் எதிர் பார்க்கிறோம். ஸ்ரீரங்கத்தில் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபௌண்டரீகபுரம், ஸ்ரீதேரெழுந்தூர் ஸ்வாமி ஸந்நிதிகளிலும் மெம்பர்களைச் சேர்த்துக்கொடுக்கும்படி ப்ரார்த்தித்து அவர்களும் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அங்கங்கே மெம்பர்களைச் சேர்க்க திட்டம் செய்திருக்கிறார். சேலத்தில் அநேகம்பெயர்களை மெம்பர்களாகச் சேர்த்து உதவிபுரியும் ஸ்ரீமான் வி. என். செல்லமய்யங்காருக்கும், ஸ்ரீவைகுண்டத்தில் அநேகம்பெயர்களைச் சேர்த்துக் கொடுத்துவரும் ஸ்ரீ. உப. தேசிகாசார்யர்ஸ்வாமிக்கும் ஸபையின் வந்தனம் சொல்லத்தக்கது.

**ஆனரரிமெம்பர்கள்:**—இந்த ஸபைக்கு ஆனரரிமெம்பர்கள் ஏழு ஸ்வாமிகள் உண்டு. இவர்களுக்குள் பண்டிதபூஷணம் சேட்டலூர் வித்வான் நரஸிம்மாசார்யஸ்வாமி, தமக்கு க்ரந்த ரசனம், பாடப்ரவசனம், காலக்ஷேபங்கள் உபந்யாஸங்கள் எவ்வளவோ இருந்தபோதிலும் தம்முடைய தேஹ ச்ரமத்தைக் கவனியாமல் அநந்ய ப்ரயோஜனராய் இந்த ஸபையின் க்ஷேமத்தை உத்தேசித்துத் தீபிகைக்கு விஷயப்ரதானம் செய்தும், ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களுக்குத் தமிழில் மொழிபெயர்த்துக்கொடுத்தும், தர்மசாஸ்த்ர சோத்யங்களுக்கு ஸமாதானங் கண்டு சொல்லியும், இன்னும் கார்யதர்சி பத்ராதிபர் இவர்களுக்கு உண்டாகும் ஸந்தேஹம், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் அப்போதைக்கப்போது ஸமாதானம் சொல்லியும், நிர்வாஹ கமிட்டியில் எல்லாக்கூட்டத்துக்கும் ஆஜராகித் தன்னுடைய அபிப்ராயத்தைத்தெரிவித்து, கார்யங்களை ஒழுங்காக நடத்திவரும்படி செய்துகொண்டும் உபகரித்துவருகிறார். புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியும், காரப்பங்காடு ஸ்ரீ. உப. சிங்கப்பெருமாள் ஸ்வாமியும் தங்களுக்கு எவ்வளவோ கார்யங்களிருந்தபோதிலும் விஷயப்ரதானம் செய்து உபகரித்துவருகிறார்கள். இஞ்சிமேடு ஸ்ரீ. உப. ரங்கநாதாசார்யஸ்வாமி, மஹாமஹோபாத்யாயர் கபிஸ்தலம் ஸ்ரீ. உப. தேசிகாசார்யஸ்வாமி, கோஷ்டிபுரம் ஸ்ரீ. உப. ஸௌம்யநாராயணாசார்யஸ்வாமி, ஸ்ரீமுஷ்ணம் ஸ்வாமி இவர்கள் அநுக்ராஹகர்களாயிருந்து வருகிறார்கள். இந்தஸ்வாமிகள் எல்லோரும் நமது வார்ஷிக மஹாஸங்கத்தில் அந்வயித்து ஸபையை கௌரவப்படுத்தி வருகிறார்கள்.

நிர்வாஹ கமிட்டி. இவ்வருஷம் ஸ்ரீ. உப. வாஸு தேவாசாரியர் கமிட்டியை விட்டு விலகிக்கொண்டார். கமிட்டி இந்தவருஷத்தில் 9 கூட்டம்கூடி ஸபையின் கணக்குக்களைப் பரிசீலித்து ஸபையின் கார்யங்களின் நடத்தவேண்டிய முறைமையை யோஜித்து நடத்திவந்தார்கள்.

உபந்யாஸங்கள். பிரதி ஸ்ரீ சென்னையில் கடைசி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் ப்ரஸித்தர்களான பண்டிதர்களைக்கொண்டு உபந்யாஸம் செய்விக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. ஒவ்வொருமாஸத்திய உபந்யாஸத்துக்கு ரூ 15 ஆகும். இதைக் கொடுத்து உபகரிக்க ஸ்ரீமான் திவான்பஹதூர் நம்பெருமாள் செட்டியாரும், ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்ஸ்வாமியும் முன்வந்து முறையே ஒவ்வொருமாதத்துக்கும் வேண்டியத்ரவ்யஸஹாயம் செய்வதாய் வாக்களித் திருக்கிறார்கள். இப்படியே இன்னும்சில ப்ரபுக்களுடைய ஸஹாயம் கிடைத்தவுடன் உபந்யாஸம் ஆரம்பிக்கப்படும்.

வெளியூர்களிலும் ஒருபண்டிதரை நியமித்து அவரை ஸஞ்சாரம் செய்யும்படி செய்து அங்கங்கு நமது மதம் ஆசாரம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் பெருமையையும் எடுத்துக்காட்டி உபந்யாஸங்களைச் செய்யும்படி ஏற்



பாடு செய்யவேணும்என்று ஸபையால் ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு த்ரவ்ய ஸஹாயம் வேண்டியிருப்பதால் அதற்குவேண்டிய ப்ரயத்னங்கள் நடந்துவருகின்றன.

**ஆச்ரமம்.** மேலப்பாளயம் ஸ்ரீ. உப. எம். ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார்ஸ்வாமி வைஷ்ணவ ஸித்தாந்தத்துக்கு வெகுஉதவிசெய்து வருகிறார், இவர் நமது ஸபையின்மூலமாக ஒரு ஆச்ரமத்தை ஏற்படுத்தி அதில்ஜ்ஞாநாநுஷ்டானஸம்பந்நரான ஒருஸ்வாமியை எழுந்தருளப்பண்ணி அவர் மூலமாக ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய ப்ரவசனத்தைச் செய்விக்கவேணும் என்றும் அதற்குத்தான் ரூ 1500 மூலதனமாகக் கொடுப்பதாகவும் எழுதிஇருக்கிறார். இவருடைய அபிப்ராயம் வெகு நல்லதானாலும், அது வெகு த்ரவ்ய ஸாத்யமானதானதால் இன்னும் இதேமாதிரி த்ரவ்யஸஹாயம் கிடைக்கும்வரையில், அந்த ஸ்வாமி ஸமர்ப்பிப்பதாகச் சொல்லும் த்ரவ்யத்தை மூலதனமாகவைத்து அதின்வ்ருத்யம்சத்திலிருந்து ஸ்ரீபாஷ்யகாரரின் ஸம்ப்ரதாயத்தில் அந்தந்தவருஷம் பரிச்ரமப்படுவர் என்று நிஷ்கர்ஷிக்கப்படும் ஒருஸ்வாமிக்கு அந்தத்தொகையில் ரூ 50. பாரிதோஷிகமாகவும் மீதத்தை ஒரு மெடலாக அந்த ஸ்வாமியின் பெயரால் கொடுக்கலாம் என்றும் ஸபையின் நிர்வாஹ கமிட்டியார் தீர்மானித்தார்கள். அந்த ஸ்வாமிக்கு இந்தத் தீர்மானம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஸ்ரீ. உப. டில்லி ராவ்ஸாஹிப் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் பண்டு.

இங்கிலீஷில் பாதிரிமார்கள் தங்கள் மதக்கொள்கைகளைப் பரவச்செய்யும்பொருட்டுச் சிறு பத்ரிகைகளை அச்சிட்டு எங்கும் விநியோகித்துத் தங்கள் மதத்தைப் பரவச்செய்வதுபோல் நமது ஸபையும் ஸ்ரீவைஷ்ணவர்களின் தத்கால நிலையைச் சீர்திருத்தி அவருடைய தீனஸ்திதியை நிவர்த்திக்கும் பொருட்டுச் சிறு சிறு பத்ரிகைகளை அச்சிட்டு எங்கும் விநியோகிக்க வேணும் என்ற அபிப்ராயத்துடன் ஒருபண்டு ஏற்படுத்தி இருக்கிறார். இதற்காகச் சென்றவருஷம் அச்சிட்ட 4000-பத்ரிகைகள் இவ்வருஷத்தில் அங்கங்கே ஆப்தர்களைக்கொண்டு தமிழ் ஜில்லாமுழுவதிலும் விநியோகிக்கப்பட்டன. அதுபோலவே இன்னும் துண்டுபத்ரிகைகளும் காலக்ரமேணபோட்டுப் பிரசுரம் செய்யப்படும்.

## ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மானம்.

1921—22-வருஷத்திய இந்த ஸம்மானம் ரூ. 15-ம், லக்ஷ்மீதத்வத்தைப் பற்றி எழுதி அனுப்பிக்கப்பட்ட வியாஸங்களில் சிலாக்யமென்று தீர்மானிக்கப்பட்டதை எழுதின ஸ்ரீ. உப. காடந்தேத்தி கோபாலாசாரியருக்குக் கொடுப்பட்டது.

கிளைஸபைகள். சேலத்திலும் நாகப்பட்டணத்திலும் அங்கிருக்கும் ஆஸ்திகர்கள் ஒன்று கூடிக் கிளை ஸபைகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

## வரவு செலவு கணக்கு.

| வரவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சென்றவருஷ இருப்பு | 563 | 3 | 6 |
| வருஷ சந்தா வரவு | 1240 | 6 | 0 |
| மறுபதிப்பு விற்ற வரவு | 5 | 12 | 0 |
| தீபிகை சாச்வத பண்டுக்கு | 39 | 0 | 0 |
| டில்லி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பண்டுக்கு | 100 | 0 | 0 |
| வித்வத் ஸதஸ்ஸுக்கு வரவு | 51 | 0 | 0 |
| உபந்யாஸ ஸம்மானத்துக்கு | 39 | 0 | 0 |
| ஸ்டோரில் போடப்பட்டிருக்கும் பணத்துக்கு 30-6-23 முடிய வட்டிவரவு | 11 | 15 | 2 |
| சில்லரை | 13 | 14 | 0 |
| மொத்தம் | 2064 | 2 | 8 |

| செலவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| அச்சிடக்கூலி | 652 | 3 | 0 |
| காகிதம் | 303 | 14 | 0 |
| தபால் சார்ஜு | 159 | 0 | 6 |
| வித்வத்ஸதஸ்ஸுக்கு | 63 | 5 | 3 |
| ஸாதல்வார் | 27 | 6 | 6 |
| சில்லரைச் செலவு | 49 | 9 | 6 |
| ஆதிவண்சடகோப ஸ்வாமி ஸம்மானம் | 15 | 0 | 0 |
| பிரயாணச்செலவு | 3 | 0 | 0 |
| மொத்தம் | 1273 | 6 | 9 |

பாக்கி கை இருப்பு 790 11 11.

| இதன்விவரம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சாச்வத பண்டு | 200 | 0 | 0 |
| டில்லி ஸ்வாமி பண்டு | 172 | 13 | 0 |
| உபந்யாஸ ஸம்மானம் பண்டு | 24 | 0 | 0 |
| தீபிகை பண்டு | 393 | 14 | 11 |



கணக்கு பரிசோதனை. இந்த வருஷத்தின் கணக்குகளைப் பரிசோதிக்க ஸ்ரீமான் K. R. ராமானுஜ அய்யங்காரையும், ஸ்ரீமான் N. V. ராமானுஜாசாரியரையும் கேட்டுக்கொள்ளும்படி கமிட்டியில் தீர்மானம் செய்ததின் பிரகாரம் அவ்விருவர்களையும் பிரார்த்தித்து அவர்கள் கணக்குகளைப் பரிசோதித்து அவ்விருவர்களுடைய ரிபோர்ட்டும் இத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

S. கோபாலஸ்வாமி அய்யங்கார்,
ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார்,
கார்யதர்சிகள்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதர்சிக்கு,

ஐயா,

எக்ஸிக்யூடிவ் கம்மிட்டியின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சென்றசெப்டம்பர்மீ 30தோடு முடிந்த ஸபையின் 1922—1923வருஷத்திய கணக்கை பரிசோதித்தேன். என்னுடையஅபிப்ராயத்தை இதில் தெரிவிக்கிறேன். 1922வருஷ டிசம்பர் மீ முடியக் கார்யதர்சியால் வைக்கப்பட்டிருந்த க்ரெடிட் டெபிட் ஸ்லிப்களை கணக்குடன்ஒத்துப்பார்த்தேன். ஜனவரிமீ 1௳ முதல் அந்த ஸ்லிப் க்ரமமானது நிறுத்திவிடப்பட்டபடியால்,வவுச்சர்களைக்கொண்டுகணக்குக்களைப் பரிசோதித்தேன். கணக்குக்களும் வவுச்சர்களும் ஸரியாகவே வைக்கப்பட்டிருப்பதும் மீதத்தை திருவல்லிக்கேணி கோஆபரேடிவ்ஸொஸைடியில் போடப்பட்டிருப்பது எனக்கு த்ருப்திகரமாக இருக்கிறது. கோவாபரேடிவ் ஸொஸயிடியில் பணத்தைப் போட்டு வைத்திருப்பதால் ஸபைக்கு சென்ற ஜூன்மீ முடிய அரை வருஷத்துக்கு ரூ. 11—15—2 லாபம் கிடைத்திருக்கிறது. இப்படிச் செய்தது மிகவும் ஸரியானது. மேலும் ஸபையின் ஐவேஜும் பந்தோபஸ்தாய்விட்டது. கார்யதர்சி எனக்கு கணக்குக்களை பரிசீலனம் செய்வதற்கு கணக்குப் புஸ்தகம் முதலியவற்றைக் கொடுத்து வேண்டிய ஸௌகர்யம் செய்து கொடுத்ததற்கு அவருக்கு என்னுடைய வந்தனத்தை அளிக்கிறேன்.

புரசைவாக்கம். 18—10—23. } ஒப்பம் K. R. ராமானுஜ அய்யங்கார்.

நான் முழுமையும் அங்கீகரிக்கிறேன்,

N. V. ராமானுஜாசாரியர்.

ஆடிட்டர்கள்.

# Appendix A.

பன்னிரண்டாவது வார்ஷிக மஹாஸங்கத்தின்

வரவு செலவு ஜாப்தா.

## RECEIPTS.

December 1922.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | Mr. M. V. Desikachariar | 10 | 0 | 0 |
| 6 | Rao Bahadur T. Namberumal Chettiar | 100 | 0 | 0 |
| 8 | Diwan Bahadur Govinda Doss Chaturbhuja Doss | 25 | 0 | 0 |
| | Messrs. Ummidi Ramiah Chetty & Bros | 10 | 0 | 0 |
| 9 | Mr. D. Sundaravaradachariar | 5 | 0 | 0 |
| 18 | Mr. K. V. Srinivasa Raghavachariar | 10 | 0 | 0 |
| 11 | Mr. K. Govindachariar | 10 | 0 | 0 |
| 12 | Mr. R. Namberumal Chettiar | 50 | 0 | 0 |
| 12 | Mr. V. Rajagopalachariar | 25 | 0 | 0 |
| 15 | Mr. V. Alwar Chettiar, Hoe & Co., | 100 | 0 | 0 |
| 16 | Mr. A. Gopalasawmy Iyengar | 10 | 0 | 0 |
| | Mr. P. Balakrishna Mudaliar | 10 | 0 | 0 |
| 19 | Mr. V. Ranganatham Chettiar | 100 | 0 | 0 |
| | Mr. K. Narasimhachariar | 10 | 0 | 0 |
| | Sri Vijaya c/o Krishnamachariar Irulappan Street | 10 | 0 | 0 |
| 20 | Mr. Tatha Chellappella Chettiar | 15 | 0 | 0 |
| | Mr. Tatha Ravenesha Chettiar | 10 | 0 | 0 |
| | Mr. K. Lakshiminarayana Chettiar | 10 | 0 | 0 |
| 21 | Mr. T. Krishnaswami Iyengar | 10 | 0 | 0 |
| 22 | Mr. Puthur Ayyanna Chetti Garu | 15 | 0 | 0 |
| | Mr. Tata Nagiah Chetti Garu | 25 | 0 | 0 |
| | Mr. Reddiar of Cuddalore | 25 | 0 | 0 |
| | Mr. T. Narasimha Iyengar of Triplicane | 25 | 0 | 0 |
| | Mr. C. Kolandavelu Mudaliar | 10 | 0 | 0 |
| | Mr. C. Narayanasawmy Mudaliar of S. K. P. D. | 10 | 0 | 0 |
| | Mr. M. V. Kuppusawmi Iyengar | 10 | 0 | 0 |
| | Mr. M. A. Nathamuni Chettiar | 100 | 0 | 0 |
| 24 | Mr. V. V. Srinivasa Iyengar | 100 | 0 | 0 |
| | Rao Bahadur T. Rangachariar | 100 | 0 | 0 |
| 25. | Mr. P. Rangiah Chetty & Sons, | 50 | 0 | 0 |
| | Mr. C. S. Venkata Chariar | 25 | 0 | 0 |
| | Mr. P. N. Krishnaswami Iyengar, Coimbatore | 15 | 0 | 0 |
| | Mess. K. M. Subbaayyar & Sons | 50 | 0 | 0 |



| | | | | |
|---|---|---|---|---|
| | „ K. M. Subbarayalu Iyer & Sons | 25 | 0 | 0 |
| | „ T. R. N. R. Gopala ayyar & Sons | 20 | 0 | 0 |
| | „ S. A. Subba ayyar & Co | 20 | 0 | 0 |
| | Mr. P. V. K. Balakrishna Aiyar | 10 | 0 | 0 |
| | Mr. Rama Naickar | 10 | 0 | 0 |
| | Mr. Tangavelu Chettiar | 5 | 0 | 0 |
| | Mr. A. R. Chakrapani Chettiar | 10 | 0 | 0 |
| | Mr. C. Venkatarangam Chetty Garu | 20 | 0 | 0 |
| | Messrs. Krishna & Co, China Bazaar Road | 10 | 0 | 0 |
| | Mr. Gokul Doss Jamna Doss | 20 | 0 | 0 |
| | Mr. Chaturbuja Doss Paramananda Doss | 25 | 0 | 0 |
| | Mr. Sami Venkatachallam Chetty | 15 | 0 | 0 |
| | Mr. Manali Mudaliar and Bros | 200 | 0 | 0 |
| | Mr. A. R. Doraiswami Iyengar | 50 | 0 | 0 |
| | Mr. M. O. Parthasarathy Iyengar | 10 | 0 | 0 |
| | Mr. C. Doraiswami Iyengar | 10 | 0 | 0 |
| | Mr. S. Raghavachariar | 10 | 0 | 0 |
| | Mr. C. Padmanabha Iyengar, Mylapore | 10 | 0 | 0 |
| | Mr. K. S. Desikachariar H. C. V. | 5 | 0 | 0 |
| | Mr. S. Rangachariar, Vakil, Mylapore | 5 | 0 | 0 |
| | Mr. N. Rajagopalahcariar, Mylapore | 5 | 0 | 0 |
| | Mr. Gunupudi Subramanya Chetty Garu | 10 | 0 | 0 |
| | Mr. T. E. Ethiraja Mudaliar Vakil | 10 | 0 | 0 |
| | Mr. K. V. Sesha Iyengar | 5 | 0 | 0 |
| | Mr. T. E. Satagopachariar, Cuddalore | 10 | 0 | 0 |
| 27 | Rao Bahadur Bunchulal Ameerchand | 25 | 0 | 0 |
| | Mr. Harsook Doss Chungann Lall | 25 | 0 | 0 |
| | Mr. Giridhar Doss Narayan Doss | 25 | 0 | 0 |
| | Mr. M. Ramgopal Chaudari | 10 | 0 | 0 |
| | Mr. Murali Doss Ram Doss | 10 | 0 | 0 |
| | Mr. M. Duraiswami Iyengar | 10 | 0 | 0 |
| | Dr. N. V. Srinivasachariar | 10 | 0 | 0 |
| | Mr. Mantra Aswatha Narayana Chetti | 10 | 0 | 0 |
| | Mr. T. Udayavarulu Chetti | 50 | 0 | 0 |
| | Mesrs. Seshadriayyangar & Sons | 7 | 0 | 0 |
| | Mr. Ramanujachariar | 10 | 0 | 0 |
| | Dewan Bahadur, P. Paramkusa Naidu | 25 | 0 | 0 |
| | Dewan Bahadur. T. Vijayaraghachariar | 10 | 0 | 0 |
| | Rao Bahadur. V. T. Krishnamachariar | 10 | 0 | 0 |
| | Mr. Nath Alwar Chettiar | 25 | 0 | 0 |
| | Mr. K. T. Bhashyam Naidu | 10 | 0 | 0 |
| | Pandit. M. Duraiswami Ayyangar | 5 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Mr. P. Anantachariar | 10 | 0 | 0 |
| | Mr. S. Sundararaja Ayyangar, Mylapore | 5 | 0 | 0 |
| 28 | Mr. T. A. Narasimhachariar | 5 | 0 | 0 |
| | Mr. V. S. Govindachariar, Vakil | 10 | 0 | 0 |
| | Mr. Seshachala Chettiar, Mylapore | 10 | 0 | 0 |
| | Mr. Ethindrulu Chetty Charities | 100 | 0 | 0 |
| | Mr. S. Varadachariar, Vakil, Mylapore | 25 | 0 | 0 |
| | Mr. B. K. Garudachariar, Bangalore | 10 | 0 | 0 |
| | From the Secretary Sri Vaishnava Siddhanta Sabha | 56 | 0 | 3 |
| | Mr. K. S. Krishnaswami Ayyangar, Triplicane | 10 | 0 | 0 |
| | Mr. A. S. Chellam Ayyangar | 5 | 0 | 0 |
| | Mr. Parthasarathy Ayyangar, Amildar | 10 | 0 | 0 |
| | Messrs. V. Kanakiah Chetty and Co. | 50 | 0 | 0 |
| 29 | M. Ramanujam Chettiar | 15 | 0 | 0 |
| Feb 3 | Mr. Ravaniah Chetty, Mint Street | 25 | 0 | 0 |
| 6 | Mr. K. Venkataraghavan, Vakil | 10 | 0 | 0 |
| | R. V. Krishnamachariar, Kumbakonam | 10 | 0 | 0 |
| 9 | M. G. Venkatranga Rao Triplicane | 10 | 0 | 0 |
| 10 | Mr. T. M. Ranganatham Naidu | 5 | 0 | 0 |
| | Mr. T. M. Gajapati Naidu Purasawalkam | 25 | 0 | 0 |
| 15 | Mr. C. Rangiah Chettiar | 15 | 0 | 0 |
| Feb 12 | Mr. C. T. Alwar Chettiar | 10 | 0 | 0 |
| | Sale of 1 Rice bag through Mr. N. Srinivasachariar | 18 | 0 | 0 |
| | By small Collections | 46 | 0 | 0 |
| | Mr. T. Namberumal Chettiar Prize Essay | 15 | 0 | 0 |
| | Rs | 2422 | 0 | 3 |

## EXPENDITURE.

| | | | |
|---|---|---|---|
| Vidvat Sambhavana | 1445 | 12 | 0 |
| Prize Essay | 15 | 0 | 0 |
| Travelling allowance to Pandits | 77 | 12 | 0 |
| Postage Charges | 30 | 5 | 0 |
| Telegram Charges | 74 | 10 | 0 |
| Printing Charges | 106 | 8 | 9 |
| Other Expenses | 369 | 1 | 9 |
| Rs | 2109 | 0 | 0 |

T. Tiruvenkatachariar.



ஷோ வக்தவ்ய:| கதம் தர்ஹி ஶ்யேநாக்நீஷோமீயவிஶேஷ:? தத்ர ஹி ஶ்யேந ஸாத்யஹிம்ஸாயா ராகப்ராப்தத்வாத் 'ந ஹிம்ஸ்யாத்' இதி நிஷேதவிஷயத்வம்| அக்நீஷோமீயபஶ்வாலம்பஸ்ய விதிப்ராப்தத்வாத் ந நிஷேத:|

யத்து ஹேதுத்வாத் ஸங்க்ருஹீதேதராவிரஹிதேதி, தத்ர கிம் ஸதஸத்விவேககாரணத்வம் விவக்ஷிதம்? உத ஆசாராதி ஹேதுத்வம்? நாத்ய:, அவஶ்யதார்யத்வம் ப்ரத்யுத ப்ரயோஜகத்வாத் ஸாங்கேதிகஸ்ய யஸ்ய கஸ்யாபி தார்யத்வ ப்ரஸங்காத், துஷ்டஶூத்ராதிபி: ப்ரஹ்மஸூத்ராதிவத் வஞ்சகைரபி தத்தாரணஸம்பவேந விவேகாநுபயோகாச்ச| பாரம்பர்யாதி பரிஜ்ஞாநேநைவ ஹி ஸதஸத்விவேக:, ந வாசநவேஷேண| ந த்விதீய:, கேவலத்ருஷ்டப்ரயோஜநத்வப்ரஸங்காத்,

அந்த ஸமயத்தில் உண்டான ஆசையினாலேயே விதியினால் ஏற்படுத்தப்பட்ட கார்யத்தைப்பற்றி நிஷேதம் செய்கிறதென்று வ்யவஸ்தை செய்வது உசிதமாகாது. அப்படிக்கில்லாமல் போனால் (அதாவது விதிக்கப்பட்ட கார்யமும் நிஷேத ஶாஸ்திரத்தினால் தடுக்கப்படலாம் என்று சொல்லில்) ஶ்யேன யாகம் அக்னீஷோமீய யாகம் இவைகளுக்கு வ்யத்யாஸம் எப்படிச் சொல்ல முடியும்? அவைகளுக்குள் ஶ்யேந யாகத்தின் பலமாகிய சத்துருவைக் கொல்லுவது ஆசையினால் ஏற்பட்டதாகையினால் ஒன்றையும் கொல்லக்கூடாது என்கிற நிஷேத ஶாஸ்திரத்திற்கு விஷயமாகிறது. அக்னீஷோமீய யாகத்தில் பசுவைக் கொல்லுவது விதியினால் ஏற்பட்டபடியினால் அதைப்பற்றி நிஷேத ஶாஸ்திரம் தடுக்கவில்லை.

ஸத்துக்கள் அங்கீகரிப்பதற்கும் மற்றவர்கள் விட்டுவிடுவதற்கும் காரணமாகையினால் என்றொரு காரணம் சொல்லப்பட்டதே, அதில், அந்தப் பதத்தினால் நல்லது கெட்டது இவைகளைப் பகுத்தறிவதற்குக் காரணமாக இருக்கை சொல்லப்படுகிறதா? அன்றிக்கே பெரியோர்கள் ஆதரிப்பதற்குக்காரணம் என்று சொல்லப்படுகிறதா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, அவஶ்யமாக தரிக்கவேண்டுமென்பதற்கு இது காரணமாகாதாகையினாலும், ஸங்கேதத்தினால் ஏற்பட்ட ஏதாவது ஒரு அடையாளத்தைத் தரிக்கவேண்டும் என்றேற்படுமாகையினாலும், கெட்டகுணமுடைய ஶூத்திரன் முதலியவர்கள் யஜ்ஞோபவீதாதிகளை தரிப்பதைப்போல மோசம் செய்பவர்களாலும் சங்க சக்ராதிகளைத் தரிக்கக்கூடுமாதலால் பகுத்தறிய முடியாதாகையினாலும். பாரம்பரை அனுஷ்டானம் முதலியவைகளை அறிவதினாலேயே நல்லவர்கள் கெட்டவர்கள் இவர்களைப் பகுத்தறிய முடியுமேயன்றி வேஷத்தினால் அறியமுடியாது. இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, கேவலம் த்ருஷ்டப்ரயோஜனத்திற்காக என்றேற்படுமாதலாலும்,

अविहितकारित्वेन तस्याप्यशिष्टत्वात्। शिष्टाः पुनः विहितकारिण एवाश्रयन्ते, "यत्त्वार्याः क्रियमाणं प्रशंसन्ति स धर्मः" इति स्मृतेः।

यच्च श्रावणाः किङ्कराश्चेति, तत्र प्रत्यक्षश्रुत्याद्यभावात् इतिहासादिषूक्तत्वाच्च दूरदूषितत्वादिति केचिद्भक्तिप्रकर्षनिमित्तं वा लौकिकदासविशेषदर्शनजनितभ्रमनिमित्तं वा केषाञ्चिदास्तिकानां चक्रादिधारणमिति।

[सिद्धान्तः]

तदेतत् प्रमितिपरिमितवैदिकवचसां अश्रुतसन्न्यायनिबन्धनानां "पतिं विश्वस्य", "दासभूताः स्वतः सर्वे" इत्यादिप्रमाणविशेषावगतस्वाभाविकशेषत्वस्वरूपदास्यभयचकितचेतसाम् उदीरणमेतदवि-

விதிக்கப்படாத கார்யத்தைச் செய்கிறவனானபடியினால் அந்தப் பெரியோர்களின் அங்கீகாரமும் ஸித்திக்காதாகையினாலும். பெரியோர்கள் ஶாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கார்யத்தைச் செய்தவர்களையே ஆதரிக்கிறார்களல்லவா? 'செய்யப்படுகிற எந்தக் கார்யத்தைப் பெரியோர்கள் புகழுகிறார்களோ அதுவே தர்மம்' என்று ஸ்ம்ருதியில் சொல்லியிருப்பதினால்.

யமகிங்கரர்கள் முதலியவர்களை ஓடும்படி செய்வதினால் என்று சொல்லப்பட்டது அதுவும் நேரில் அப்படிச் சொல்லக்கூடிய ஶ்ருதி முதலியவைகள் இல்லாமையினாலும் புராணம் முதலியவைகளுக்கு முன்னமேயே பதில் சொல்லப்பட்டபடியினாலும் நிராகரிக்கப்பட்டது. ஆதலால் சில ஆஸ்திகர்கள் சக்ரம் முதலியவைகளைத் தரிப்பது பக்தியின் மிகுதியைக் காரணமாக உடையதாகவுமாம், அன்றிக்கே உலகத்தில் காணப்படுகிற தாஸர், (அடிமை) களைப் பார்ப்பதினால் உண்டாகிய ப்ரமத்தைக் காரணமாக உடையதாகவுமாம், என்று நினைக்கிறார்கள்.

[ஸித்தாந்தாரம்பம்.]

அப்படிப்பட்ட இந்த வார்த்தை கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொள்ளப்பட்ட சில வேதவாக்யங்களை உடையவர்களாயும், நல்ல ந்யாயங்களை நிரூபிக்கும் க்ரந்தங்களைப் பரிசயம் செய்யாதவர்களாயும், 'உலகத்திற்கெல்லாம் யஜமானனாகிய' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம், 'எல்லோரும் ஸ்வபாவத்திலேயே (பகவானுக்கு) ஶேஷபூதர்கள்' என்றிவை முதலிய ப்ரமாணங்களினால் அறியப்பட்டதாயும் ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டதுமான பகவானுக்குத் தாஸனாக இருக்கையில் பயத்தினால் ஓடுகிற மனதை உடையவர்களாயும்,



ज्ञानां कूपकूर्मायमाणकलियुगानुसारितत्त्वविचारकाभिमानविजृम्भितम्। तथा हि — सत्यं चोदनालक्षणोऽर्थो धर्मः। विद्यते च चक्रादिधारणे चोदना तत्प्रकारश्च।

श्रुत्या स्मृत्या पुराणेन सेतिहासेन पठ्यते।
पञ्चरात्रेण विप्राणां तप्तचक्रादिधारणम्॥

यथा आथर्वणे महोपनिषदि ब्रह्मसूक्ते — "दक्षिणे तु भुजे विप्रो बिभृयाद्वै सुदर्शनम्। सव्ये तु शङ्खं बिभृयादिति ब्रह्मविदो विदुः॥" इति। यजुषि कठशाखायाम् — "धृतोर्ध्वपुण्ड्रः कृतचक्रधारी विष्णुं परं ध्यायति यो महात्मा। स्वरेण मन्त्रेण सदा हृदि स्थितं परात्परं यन्महतो महान्तम्॥" इति।

கிணற்றுக்குள் உண்டாகிய ஆமைக்கு ஸமானமாயும் இருக்கிற கலியுகத்தை அநுஸரித்த தத்வவிசாரம் செய்பவர்களுடைய அபிமானத்தினால் ஏற்பட்டது. எப்படி என்னில்:—(அதை நிரூபிக்கிறோம்)—விதிவாக்யத்தினால் அறியப்பட்டதும் ஒரு ப்ரயோஜனத்திற்கு காரணமாகவும் எது இருக்கிறதோ அதுவே தர்மம் என்பது உண்மையே. சக்ரம் முதலியவைகளைத் தரிக்கும் விஷயத்தில் விதி இருக்கிறது. அதை அனுஷ்டிக்கும் ப்ரகாரமும் இருக்கிறது.

வேதத்தினாலும் ஸ்ம்ருதிகளினாலும் இதிஹாஸங்களோடு சேர்ந்த புராணங்களினாலும் பாஞ்சராத்திர ஶாஸ்திரத்தினாலும் ப்ராம்மணர்களுக்கு அக்னியில் தாபம் செய்யப்பட்ட சக்ரம் முதலியவைகளை தரிப்பது சொல்லப்படுகிறது.

எப்படி என்னில்:—அதர்வண வேதத்தைச் சேர்ந்த மஹோபநிஷத்தில், ப்ரும்மஸூக்தத்தில் 'ப்ராம்மணன் வலது கையில் சக்ரத்தைத் தரிக்கவேண்டும், இடது கையில் சங்கத்தை தரிக்கவேண்டும் என்று ப்ரும்ம வித்துக்கள் சொல்லுகிறார்கள்' என்றும், யஜுர் வேதத்தில், கடசாகையில் 'திருமண் காப்புகளைத் தரித்துக்கொண்டவனாயும் தாபம் செய்யப்பட்ட சக்ரத்தைத் தரித்துக்கொண்டவனாயும் இருக்கிற எந்த மஹாத்மா ப்ரணவம் என்கிற மந்திரத்தினால் எப்பொழுதும் ஹ்ருதயத்தில் வஸித்துக்கொண்டிருக்கிற பரமாத்மாவாகிய விஷ்ணுவை த்யானம் செய்கிறானோ அவன் எல்லா உயர்ந்தவர்களைவிட உயர்ந்தவனாயும் பெரியவஸ்துக்களைக்காட்டிலும் பெரியவனாயுமிருக்கிற அந்தப்பரமாத்மாவை (அடைகிறான்)' என்றும், ருக்வேதத்தில், பாஷ்கலஸம்ஹிதையில், 'ஓ!

[illegible]

விஷ்ணுவே! பரிசுத்தங்களான உம்முடைய சங்கசக்ரங்களைப் பெரியோர்கள் ஜன்மமாகிற ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்காக தோள்களில் தரிக்கிருர்கள், இன்னும்சிலர்உம்முடையமற்றஆயுதங்களையும் ஶரீரங்களில் தரிக்கிருர்கள்' என்றும், யஜுர்வேதத்தில்,ப்ருஹதாரண்யகத்திலும் அதர்வணவேதத்தில்ஸுதர்ஶநோபநிஷத்திலும், 'எவன்சக்ரத்தை இதுபகவானுடைய சின்னம், விஶேஷமான தேஜஸ்ஸையுடையது என்று தோள்களில் தரிக்கிருனே அவன் தன்னை மிகவும் தொந்திரவு செய்வதாகவும் அனேகம் விதமாகப் பிரிக்கப்பட்டவைகளுமான பாபங்களைத் தள்ளிவிடுகிருன், எப்பொழுதும் (யமகிங்கரர்களை) பயமுறுத்துகிறதாதலால் அவனைச்சேர்ந்த ஜனங்கள்(அதை)தரிக்கக்கடவர்கள்' என்றும்,ருக்வேதத்திலும்ஸாமவேதத்திலும்'பகவானுக்குஶேஷபூதனைஒரு பக்ஷிவிஶேஷமாகிய பருந்து சக்ரம் முதலிய ஆயுதங்களைத்தரித்து அவனுடைய நித்யஸூரிகளின் ஸதஸ்ஸில் சேர்ந்துவிட்டது. இப்படியே ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தை அடைந்திருக்கிற மற்றவனும் ஸம்ஸார ஸமுத்திரத்தைத்தாண்டி எல்லோராலும் கொண்டாடப்பட்டவனாய் நாலாவது ஸ்தானத்தை அடைகிருன்' என்றும், அதர்வணவேதத்தில், நாம் ' பகவானுடைய இந்த ஆயுதங்களினுல் அடையாளம் செய்யப்பட்டவர்களாய் இந்த லோகத்தில் நல்ல பாக்யத்தை அடைந்தவர்களாகக் கடவோம், அந்தப் பகவானுடைய பரமபதத்தை எவர்கள் அடைகிருர்களோ அவர்கள் இந்தச் சக்ராதிகளால் அடையாளம் செய்யப்பட்டவர்களே, அன்றிக்கே எவர்கள் சக்ராதிகளால் அடையாளம் செய்யப்பட்டிருக்கிருர்களோ அவர்கள் அந்தப் பரமபதத்தை அடைந்தவர்கள்' என்றும், ருக்வேதகிலத்தில் "தேவதைகளைக் காப்பாற்றக்கூடியதான தாபம்செய்யப்பட்ட சக்ரத்தை எவன் ஶரீரத்தினுல் தரிக்கிருனே அவன் பாபத்தைப் போக்கடித்துவிட்டு அழிவில்லாதவனுகிய விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடைகிருன், எந்த ஸ்தானத்தை ஸம்ஸாரத்தில் ஆசையில்லாதவர்களான ஸந்யாஸிகள் அடைகிருர்களோ" என்றும், ஸாமவேதத்தில் 'பவித்ரம் என்று சொல்லப்படுகிறது அக்னி, அக்னியாவது ஆயிரம் அரங்களையுடையது,அப்படிப்பட்டது சக்ரம்,அந்தச் சக்ரத்தினுல் தாபம் செய்யப்பட்ட ஶரீரத்தை உடையவன் பரமாத்மாவின் ஸாயுஜ்யத்தையும் ஸாலோக்யத்தையும் அடைகிருன் என்று உபநிஷத்துச்சொல்லுகிறது' என்றும், ருக்யஜுஸ் ஸாமவேதங்களில் 'ப்ரும்மாவிற்கும் யஜமானனுகிய பகவானே! உம்முடைய சக்ரம் இவ்வுலகத்தில் எங்கும் பரவி இருக்கிறது,எல்லா உலகத்திற்கும் யஜமானனுகிய நீர் உம்முடைய ஶரீரங்களாகிய எல்லா உலகத்தையும் அந்த சக்ரத்தின் மூலமாக வ்யாபரித்துக் கொண்டிருக்கிறீர், ஆதலால் சக்ரத்தினுல் தாபம் செய்யப்படாத ஶரீரத்தை உடையவன் ஆமன் (பரிபாகத்தை அடையாதவன்) என்னப்படுகிருன், அவன் அந்த ப்ரும்மத்தை அடையமாட்டான், அதனுல் தாபம் செய்யப்பட்டவன் பரிபக்வமான பாபங்களை உடையவன் அந்த ப்ரும்மத்தையே அனுபவிக்கிருன்' என்றும், யஜுர்வேதத்தில் காடகத்தில் 'அநாதியாய் மிகவும் பரிசுத்தமான சக்ரம்' என்கிற வாக்யம் முதலாக ஆரம்பித்து 'நல்ல புத்தியையுடையவனுக இருக்கையைக் கொடுக்கவேண்டும்' என்னுமளவான வாக்யம் வரையிலாக அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்கள் இருக்கின்றன. இப்படியே மற்றவைகளும் பார்த்துக்கொள்ளத்தக்கது.



[illegible]

இவ்விடத்தில் சிலவாக்யங்கள் நம்பக்கூடியவைகள் அல்லவாகையினுலும், படிக்கப்பட்ட வாக்யங்களுக்கும் வேறு கர்மங்களில் உபயோகம் சொல்லப்பட்டிருப்பதினுல் அவைகள் வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினுலும், ஸ்ம்ருதிகளில் விநியோகம் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவைகள் ஶ்ருதியில்

𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌰𑍋𑌧𑍇𑌨 𑌨𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 𑌅𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌤𑍍𑌵𑌯𑍈𑌵𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 𑌅𑌭𑌿𑌮𑌤𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌅𑌤𑌿𑌤𑍁𑌚𑍍𑌛𑌮𑍇𑌤𑌤𑍍 |

𑌤𑌥𑌾𑌹𑌿 — 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌕𑌿𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌨𑍀𑌯𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌅𑌥 𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍? 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃, 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌾𑌦𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑍍𑌯𑌨𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑌦𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 | 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃, 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 | 𑌨 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌤𑌦𑌭𑌾𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿, 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌂 𑌨 𑌧𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 | 𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍇𑌕𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌤𑌤𑍍𑌸𑌮𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌾𑌦𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌸𑌤𑌿 𑌅𑌨𑍍𑌯𑌪𑌰𑌤𑌯𑌾 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 |

---

சொல்லப்பட்டிருக்கும் விநியோகத்தை அனுஸரித்து அர்த்தம் சொல்லக்கூடியவைகளாதலாலும், விநியோகிக்கப்பட்ட மந்திரங்கள் விதியைச்சொல்லாதாகையினாலும், விநியோகமில்லாத லிங்கமான வாக்யமும் லிங்கமில்லாத வாக்யமும் உன்னாலேயே ஒப்புக்கொள்ளப்படாமையினால் உன் இஷ்டம் ஸித்திக்காது என்னில், இது மிகவும் அல்பமான ஆக்ஷேபம்.

எப்படி என்னில்:-- லிங்கமான வாக்யங்களுக்கு லிங்கம் என்கிற காரணம் மாத்திரத்தினால் நம்பக்கூடாதிருக்கும் தன்மை ஏற்படுகிறதா? அப்படிப்பட்ட லிங்க வாக்யங்களுக்குள் ஒரு வகுப்பாதலால் நம்பக்கூடாதிருக்கும் தன்மை ஏற்படுகிறதா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, யஜ்ஞோபவீதம் முதலியவைகளின் மந்திரங்களும் நம்ப இடமாகாமல் போகவேண்டிவரும். இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, இரண்டிற்கும் ஒருவித வ்யத்யாஸமும் ஏற்படாமையினால். இந்த ஶ்ருதிகளுக்கு ப்ரத்யக்ஷமாகப் படிக்கப்படுகிற ஶ்ருதிகளுக்கு விரோதமாக இருக்கையும், யஜ்ஞோபவீதமந்திரம் முதலியவைகளுக்கு அப்படி விரோதம் இல்லாமையுமாகிற வ்யத்யாஸமிருக்கிறதே என்னில், அதுவும் உசிதமல்ல, ப்ராம்மணர் முதலியவர்களினால் சக்ரம் முதலியது தரிக்கத்தக்கதல்ல என்று சொல்லுகிற ஶ்ருதி காணப்படாமையினால். அப்படிக்காணப்பட்டபோதிலும் நேரில் விதிக்கிற அநேகம் ஶ்ருதிகளுக்கும், அவற்றிற்கு ஸமமான பாஞ்சராத்திர ஶாஸ்திரம், மஹாபாரதம் முதலியவைகளுக்கு விரோதமாக இருந்ததேயானால் அந்த ஶ்ருதியே வேறொரு தாத்பர்யத்தை உடையதென்று நிர்வாஹம் செய்யத்தக்கதாகையினாலும்.



𑌨 𑌚𑌾𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑌮𑍍𑌭𑌵𑌃, 𑌚𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌧𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌦𑍁𑌃𑌖𑍈𑌕𑌰𑍂𑌪𑌤𑌯𑌾𑌵𑌗𑌮𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌰𑌾𑌗𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌯𑍋𑌗𑍇𑌨 𑌨𑌿𑌷𑍇𑌧𑌾𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 | 𑌵𑌿𑌧𑌿𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌤𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌧𑌿𑌰𑍇𑌵 𑌬𑌾𑌧𑌿𑌕𑌾 | 𑌨𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌰 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍋𑌽𑌪𑌿 𑌸𑌮𑍍𑌭𑌵𑌤𑌿, 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌿 𑌦𑍁𑌃𑌖𑌤𑌦𑌭𑌾𑌵𑌰𑍂𑌪𑌯𑍋𑌸𑍍𑌤𑌯𑍋𑌰𑍍𑌯𑍋𑌗𑌾𑌤𑍍, 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑌸𑍍𑌯 𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑌲𑍍𑌪𑌨𑍇 𑌗𑍌𑌰𑌵𑌾𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 | 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌤𑌦𑌭𑌾𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌸𑌙𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌨𑍁𑌦𑌯𑌾𑌤𑍍, 𑌉𑌦𑌿𑌤𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 𑌯𑌥𑌾𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌦𑌵𑌿𑌰𑍋𑌧𑍇𑌨 𑌨𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 | 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 | 𑌨 𑌚𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑌃, 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌤𑍋 𑌵𑍍𑌰𑌣𑌕𑌰𑌣𑌾𑌦𑌿𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌾𑌪𑌵𑌾𑌦𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑍈𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍀𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌨𑍇𑌕𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾

---

மேலும் இவ்விஷயத்தில் நிஷேதம் (மறுப்பது) ஸம்பவிக்காது, சக்ரம் முதலியவைகளைத் தரிப்பது கேவலம் து:க்கரூபமாகவே அறியப்படுகிறபடியினால் அது நம்முடைய ஆசையினால் ஏற்பட்டதல்ல வாகையினாலே அதைப் பற்றி நிஷேதம் செய்யக்கூடாதாதலால். விதியினாலேற்பட்டதென்னில், விதி வாக்யமே விரோதமாகும். இவ்விஷயத்தில் இதற்கு விகல்பமும் ஸம்பவிக்காது. து:க்கமாகவும் அது இல்லாமையாகவும் இருக்கிற இவ்விரண்டு கார்யங்களுக்கும் ஒரு அதிகாரியினிடத்திலேயே விகல்பமா யிருப்பது பொருந்தாது.* ஏதாவது ஒரு வ்யவஸ்தை ஏற்படுத்துவோம் என்னில், அப்படி ஏற்படுத்துவதினால் கௌரவம் உண்டாகிறபடியினாலும், அதிப்ரஸங்கம் வருகிறபடியினாலும். ஶ்ருதிக்கு விரோதமாக இருப்பதினாலும் அப்படி இல்லாமையாலும் வ்யத்யாஸம் இருக்கிறதே என்னில், மற்ற அநேகம் ஸ்ம்ருதிகளினால் அங்கீகரிக்கப்பட்ட ஶ்ருதிக்கு விருத்தமான ஸ்ம்ருதி ஆப்தர்களான ரிஷிகளிடத்தில் உண்டாகாது. அப்படி உண்டானாலும் எவ்விதமாயாவது விரோதமில்லாமல் அதற்கு அர்த்தம் சொல்லிக்கொள்ளவேண்டியது. முற்றிலும் விரோதமாயிருந்தால் விரோதாதிகரணத்தில் சொல்லிய ந்யாயத்தினால் அது விடத்தக்கதாகுமாகையினாலும். அப்படி ஸ்ம்ருதிகளுக்கும் முற்றிலும் விரோதமுமில்லை. பொதுவாக காயம் செய்வது முதலியதைப்பற்றிய நிஷேதம் உத்ஸர்காபவாத ந்யாயத்தினால் மேலே ஸ்தாபிக்கப்படப்போகிற ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸம், பாஞ்சராத்ரஶாஸ்திரம் இவைகளுக்கு ஸமமான அர்த்தத்தைச் சொல்லவேண்டியபடியி

---

* அப்படியாகில் ஒருவனும் துக்கரூபமான சக்ரத்தைத் தரிக்கமாட்டானாகையினால் என்றபடி.

𑌯𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌅𑌗𑍍𑌨𑍀𑌷𑍋𑌮𑍀𑌯𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑍇𑌰𑌪𑌿 '𑌨 𑌹𑌿𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌧𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌤𑌦𑌭𑌾𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌕𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃? 𑌕𑌿𑌮𑌧𑍀𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌵? 𑌉𑌤 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌖𑌿𑌲𑌤𑍍𑌵𑍇𑌨 𑌶𑍍𑌰𑌵𑌣𑌪𑌰𑌂𑌪𑌰𑌾𑌗𑌤𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌦𑌿𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃, 𑌖𑌿𑌲𑌤𑍍𑌵𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 । 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃, 𑌯𑌾𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌵 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌤𑌦𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌇𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌾𑌸𑍀𑌤𑌿𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨, 𑌅𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌷𑍁 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑍇 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑌪𑌿 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌦𑍇𑌶𑌾𑌦𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑍇 𑌵𑌾𑌹𑌃 "𑌹𑌰𑌿𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌬𑌾𑌹𑍍𑌲𑍀𑌕𑌾 𑌨 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑌿 𑌹𑌰𑌿𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍", "𑌬𑌾𑌹𑍍𑌲𑍀𑌕𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑍈𑌵" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌾𑌦𑌿𑌵𑌚𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨

---

னாலே அவைகளில் நிரூபிக்கப்பட்ட அர்த்தத்தைத் தவிர மற்றதைச்சொல்லுகிறதாதலால். அப்படிக்கில்லாவிடில் அக்னீஷோமீய யாகத்தில் செய்கிற ஹிம்ஸை முதலியதும் 'ஒரு ப்ராணியையும் ஹிம்ஸை செய்யக்கூடாது' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளினாலே மறுக்கப்பட்டிருப்பதினால் அதர்மமாகவேண்டிவருமாதலால். ப்ரஸித்தி, அது இல்லாமை, இவைகளால் வ்யத்யாஸம் இருக்கிறது என்னில், இவ்விடத்தில் ப்ரஸித்தியாவது என்ன? அத்யயனம் செய்யப்பட்டிருக்கையா? அன்றிக்கே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கையா? கிலம் என்று கேள்வியின் பரம்பரையால் ஏற்பட்டிருக்கையா? அன்றிக்கே ஸூத்திரகாரர் முதலியவர்களினால் எடுக்கப்பட்டிருக்கையா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, கிலம் என்பதற்கு விரோதமாயிருப்பதினால். இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, உன்னைப்போலத் தைரியத்தினால் ஸம்ஶயப்படுகிறவனைக் குறித்து அது ஏற்படாதாகையினால். இதற்கு முன் அதைப் பற்றி ஸந்தேஹம் இல்லை என்னில் அதுவும், உசிதமல்ல, இந்தவாக்யத்திலும் இதற்கு முன்னும் பின்னுமாகிய ஸத்வகுணம் நிறைந்த காலங்களில் இதைப் பற்றிய ஸந்தேஹம் இருக்கும் என்பதில் ப்ரமாணம் இல்லாமையினாலும், இப்பொழுதும் ஸாத்விகர்களாய்ச் சிறந்ததேசம் முதலியவைகளில் வஸிக்கிறவர்களுக்கு அதில் ஸந்தேஹம் இல்லாமையினாலும். 'எவர்கள், பாஹ்லீகதேசத்தில் வஸிப்பவர்களோ அவர்கள் விஷ்ணுவிற்குப்புறம்பானவர்கள். ஒருபொழுதும் பகவானை ஸ்மரிக்கிறதில்லை', 'பாஹ்லீகதேசத்தில் இருக்கும் அவர்களைப்பார்த்தால் (ப்ராயஶ்சித்தம் [illegible]டும்)' என்றிவைமுதலிய மஹாபாரதம் முதலிய புராணங்களில் இருக்கும் [illegible]னங்களில் சொல்லப்பட்டதா

186734

ஸ்ரீ:

## ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம்.

## தமிழ்மொழி பெயர்ப்புடன்.

திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம் என்று மூன்று ரஹஸ்யங்களின் அர்த்தங்களை நிரூபிக்கும்பொருட்டு ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் என்னும் க்ரந்தத்தை மணிப்ரவாளத்தில் ஸாதித்தருளினர். ஸங்க்ரஹருசிகளும் அதைஸங்க்ஷேபமாய்அநுஸந்திக்கும் பொருட்டும், தமிழ்ப்பாஷைநடையாடாத இடங்களிலிருப்பவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டு அவருடைய திருக்குமாரராகிய ஸ்ரீகுமாரவரதாசார்யர் என்ற ஸ்ரீநைநாராசார்யர் அவ்வர்த்தங்களை ஸம்ஸ்க்ருதபாஷையில் இந்த க்ரந்தத்தில் அருளிச்செய்தார். இது ஸ்ரீ உ. வே. பண்டிதபூஷணம் வித்வான் சே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியாலும், அவர் சிஷ்யரும் வேதாந்த தீபிகை பத்ராதிபருமான ஸேடானூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும் எல்லோரும்படித்து விஷயத்தைத் தெரிந்துகொள்ளும்படி எளிதான நடையில் தமிழ் மொழி பெயர்ப்புடன் இயற்றப்பட்டது. இது வேதாந்ததீபிகையின் மறுபதிப்பு. இதன்விலை அணா 8. வேண்டுவோர் - ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபை கார்யதர்சிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஸ்ரீவைஷ்ணவ தீபிகை.

இது சரீரம், ஆத்மா, பகவான், இவைகளின் ஸ்வரூபம், வைஷ்ணவர்களின் லக்ஷணங்கள், நித்யாநுஷ்டானம், நீராடல், திருமண்காப்பு, திருவாராதனம் திவ்யப்ரபந்தம் ஸேவிக்கும்முறை, காலம், திவ்யப்ரபந்தம் ஸேவிக்கலாகாமுறை, காலம், வைஷ்ணவ மாதரொழுக்கம், பகவதாலயதர்சனவிதி முதலியவிஷயங்கள் எளிதில்யாவரும் அறியும்படி வினாவிடையாகச் சுருக்கச்செய்துள்ள ஒரு சிறுபுஸ்தகம். இது புவனகிரி அழகியமணவாளராமாநுஜ ஏகாங்கிஸ்வாமியால் செய்யப்பட்டு, திருவருணை ஆயுர் வேத வைத்யர் ஸ்ரீமான் அ. வெங்கடாசல முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.

இந்த ஏகாங்கிஸ்வாமி ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் விஷயங்கள் மணிப்ரவாளநடையில் எழுதி இருப்பது இருப்புக்கடலைபோன்றது என்று சொல்லிக்கொண்டு தமிழில் ஸுலபமாக எழுதமுயன்றவர், தமிழ்பாஷையில் தனக்கிருக்கும் பாண்டித்யத்தால் செந்தமிழில்எழுதி விஷயத்தை ஒரே எஃகுக்கடலையாகச் செய்துவிட்டார். ஸுலபமான தமிழில் எழுதி இருந்தால் அவர்உத்தேசித்த கார்யம் நிறைவேறும். மறுபதிப்பிலாவது திருத்திக்கொள்வாராக. இதன்விலை அணா 6. வேண்டுவோர் ஆயுர்வேதவைத்யர் அ. வெங்கடாசலமுதலியார் - 18 வளையல்கார தெரு, திருவண்ணாமலைக்கு, எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## அஹோபிலமடம்.

தற்காலம் வீரவநல்லூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு நடந்துவரும் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை மாதத்துக்குள் முடிவுபெற்றுச் சாற்றுமுறையாகுமென்றும், உடனே ஸ்ரீ ஸ்வாமி அவ்விடம் விட்டு யாத்ரையாக எழுந்தருளும்படி யிருக்குமென்றும் ஷை ஸந்நிதி திவான் ஸ்ரீ. உ. வே. எஸ். டி. க்ருஷ்ணய்யங்கார் அறிவிக்கிறார். ஸ்ரீ அழகிய சிங்கரை ஸேவிக்கவேண்டுமென்று நாநாதேசங்களில் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சிஷ்யகோடிகளுக்கு இந்த ஸமாசாரம் அத்யந்தம் ஸந்தோஷகரமாயிருக்குமென்பது நிச்சயம்.

## விளம்பரம்.

தீபிகைக்கு வ்யாஸங்கள், சந்தா, விலாஸமாறுதல்கள், இன்னும் தீபிகை விஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விவரத்துக்கு ஆகும் கடிதங்கள் எல்லாம் ஸபையின் கார்யதரிசிக்கு, 2/11 ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், வேப்பேரிபோஸ்டு என்ற விலாஸத்துக்கு அனுப்பவேணும்.

வ்யாஸம் எழுதுகிறவர்கள் விஷயத்தை எளிதான தமிழ் நடையில் எழுதிப் பிரமாணங்களைக் கீழ்க்குறிப்புக்களாக எழுதியனுப்பவேணும். ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்கும் வாக்கியங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பு எழுதிவிடவேணும். வ்யாஸங்கள் நேரில் அச்சாபீசுக்கு அனுப்பப்படுவதால் எழுத்துக்களை ஸ்பஷ்டமாகவும் விரளமாகவும் கடுதாசியின் ஒருபக்கத்திலேயே எழுதி அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

மெம்பர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் விலாஸத்துக்கு ஸஞ்சிகைகள் அப்போதைக்கப்போது வெகு ஜாக்கிரதையுடன் அனுப்பப்பட்டு வருகின்றன. ஸஞ்சிகைகள் வேண்டிய அளவுதான் அச்சிடப்படுவதால் தபால் மூலமாகவோ, ஸரியான முகவிலாஸம் இல்லாததினாலோ சேராத ஸஞ்சிகைகளுக்கு நாங்கள் உத்தரவாதமாகமாட்டோமென்று விநயத்துடன் தெரிவிக்கிறோம்.

பழைய ஸஞ்சிகைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஸ்வல்பமாக இருப்பதாலும் தேவை ஜாஸ்தியாக இருப்பதாலும், வேண்டியவர்கள் தாமதமின்றி எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

கார்யதர்சி.

## ஹிந்துமதஸ்தாபந மசோதா

சென்ற டிஸம்பர்மீ 10 தேதி நடைபெற்ற சென்னை சட்டஸபையின் மீட்டிங்கில், பெருமைதங்கிய கவர்னரவர்கள் ஷை மசோதாவின் சில அம்சங்களைச் சட்டஸபையார் மீண்டும் ஆலோசித்துத் திருத்தியமைக்கும்படி அதைத் திருப்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மடங்களையும், ஹைகோர்ட்டு ப்ரிவி கௌன்ஸில்களினால் நிர்வாஹமுறைகள் (schemes) ஏற்படுத்தப்பட்ட தேவஸ்தானங்களையும் ஷை மசோதாவின் ஆதிக்யத்தினின்றும் நீக்கிவிடவேண்டுமென்று கவர்னரவர்கள் அபிப்ராயப் படுவதாகக் கருதப்படுகின்றது. எவ்வகையிலாயினும் இது புனராலோசனைக்கு சட்டஸபைக்கு வருவதால் மஹாஜனங்களும், மடாதிபதிகள்முதலிய அக்கறைப் பட்டவர்களும், ஜனப்ரதிநிதிகளாகச் சட்டஸபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கவனித்து மதஸம்ப்ரதாயவிஷயங்களில் ஷை சட்டம் ப்ரவேசிக்காமல் பாதுகாத்துத் தமது பொறுப்பை நிறைவேற்றும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவச்யமாயிருக்கிறது. இதில் கொஞ்சமேனும் ஆலஸ்யம்கூடாது.